**இலங்கை மகாவலி அதிகாரசபையின் மற்றும் அதன் துணைக் கம்பனிகளை உள்ளடக்கிய தொகுதம் - 2022**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

இலங்கை மகாவலி அதிகாரசபை மற்றும் அதன் துணைக் கம்பனிகளை உள்ளடக்கிய தொகுதியின் (''அதிகாரசபை'') 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக , அதிகாரசபை மற்றும் தொகுதியின் நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் அதிகாரசபை மற்றும் அதன் துணைக் கம்பனிகளை உள்ளடக்கிய தொகுதியின் நிதிக்கூற்றுக்கள் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக்குழுவை

கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு ஆணைக்குழு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமானசமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள்,ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும்வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள்,புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில்உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபையின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகாரசபையின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு மற்றும் தற்போது அதிகாரசபையால் நிர்வகித்தல், செயற்படுத்துதல், பராமரித்தல் மற்றும் மேம்படுத்தல் | 2023 ஆம் ஆண்டில் நிர்வகித்தல், செயற்படுத்துதல், பராமரித்தல் மற்றும் | நியமத்தின் பிரகாரம், அணைகள், கால்வாய்கள், வடிகால் அமைப்புகள், |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டு வருகின்ற 11 பிரதான அணைகளின் கிரயம் ரூபா 37.31 பில்லியன் ஆக நிதிக்கூற்றுக்களில் குறிப்புகள் மூலம் வெளிக்காட்டப்பட்டிருந்தபோதிலும் , இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 7 இன் 19 ஆம் பந்தியின் பிரகாரம் அவற்றின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்படவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மேலும், அதிகாரசபையால் அந்தச் சொத்துகளின் செயற்பாட்டு மற்றும் பராமரிப்புச் செலவுகள் செய்யப்பட்டு வருகின்ற போதிலும் அவற்றில் மூலதனமாக்கப்பட வேண்டிய செலவுகள் அடையாளம் காணப்பட்டு முறையாக கணக்கீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததுடன், அவை பொருத்தமான அடிப்படையில் ஆண்டுதோறும் தேய்மானம் செய்யப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | மேம்படுத்தல் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற 11 முக்கிய அணைகளை மதிப்பிடுவதற்காக, அந்த அணைகளின் சட்டப்பூர்வ உரிமைகள் மற்றும் யாருக்கு எவ்வாறு மாற்றப்பட்டன என்பது தொடர்பாக தீர்மானிக்கப்பட முடியாமை காரணமாக அது தொடர்பாக இலங்கை மின்சார சபையுடன் தற்போது காணப்படுகின்ற ஆவணங்களின் படி தற்போது கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அதில் தீர்மானித்தவாறு அதிகாரசபையின் உரிமை உறுதிப்படுத்தப்பட்டு முறையாக மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பிற நீர்ப்பாசனத் தொழில்கள் மற்றும் கட்டமைப்புகள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுவதற்கும், ஆண்டுதோறும் ஏற்படுகின்ற மூலதனமாக்கப்பட வேண்டிய செலவுகள் மூலதனமாக்கப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அதிகாரசபையின் 18 பிராந்தியங்கள் மற்றும் பிரிவுகளுக்காக தனித்தனியாக தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 1 இன் 118 ஆம் பந்தியின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் 127 ஆம் பந்தியின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதன் அடிப்படை மற்றும் கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் பிற வெளிப்படுத்தல்களைக் கொண்ட குறிப்புகள் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும், 11 பிராந்தியங்களினால் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 2 இன் 1 ஆம் பந்தியின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய காசப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பிக்கப்படவில்லை. | அதிகாரசபை ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது தலைமை அலுவலகம் உட்பட பிராந்தியங்கள் மற்றும் பிரிவுகளின் நிதிக்கூற்றுக்களை பயன்படுத்தி அதன் அடிப்படையில் ஒருங்கிணைந்த நிதிநிலை நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கின்றது.<br><br>தலைமை அலுவலகம் உட்பட பிராந்தியங்கள் மற்றும் பிரிவுகளின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள், கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் | அதிகாரசபையின் அனைத்து பிராந்தியங்கள் மற்றும் பிரிவுகளால் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, கணக்கீட்டு கொள்கைகள் உள்ளிட்ட குறிப்புகள் மற்றும் பிற வெளிப்படுத்தல்கள் மற்றும் காசப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

அடிப்படைகளை அதிகாரசபை பொதுவாக முடிவு செய்துள்ளதுடன் , தலைமை அலுவலகம் உட்பட ஒவ்வொரு பிராந்தியங்கள் மற்றும் பிரிவுகளுக்கும் தனித்தனியான முடிவுகள் எடுக்கப்படுவதில்லை. மேலும், அனைத்து சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் நம்பிக்கைப்பொறுப்பு அதிகார சபையின் பெயரில் உள்ளன. அதன்படி, தலைமை அலுவலகம் உட்பட அனைத்து பிராந்தியங்கள் மற்றும் பிரிவுகளுக்கான "உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று ", ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களில் சேர்க்கப்பட்டுள்ள தரவுகள் மூலம் மட்டுமே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், பிராந்தியங்கள் மற்றும் பிரிவுகளுக்கு தனியாக நிதி வழங்கப்படல் மற்றும் பிரிவுகள் /பிராந்தியங்களுக்குச் சொந்தமான வளங்களைப் பயன்படுத்தி வருமானம் ஈட்டுவதன் மூலம் நிதி திரட்டப்படுவதால், பிராந்தியங்கள்/ பிரிவுகளுக்கான காசப்பாய்ச்சல் கூற்று தனியாகத் தயாரிக்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கிறேன். அதன்படி, 2023 ஆம் ஆண்டு முதல், அந்த மாதிரியின் அடிப்படையில் காசப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 1 இன் 53 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டுள்ள அனைத்து புள்ளி விபர தகவல்களுக்கும் முன்னைய ஆண்டிற்கான ஒப்பீட்டுத் தகவல்கள் வெளியிடப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையால் ஒருங்கிணைந்த காசப்பாய்ச்சல் கூற்றுக்கான ஒப்பீட்டுத் தகவல்கள் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை. மேலும், தொகுதியின் நிதி நிலைமைக் கூற்றில் ஒப்பீட்டுத் தகவல்களை காட்டும்போது முன்னைய ஆண்டின் கணக்காய்வு செய்யப்பட்ட நிலுவைகள் சமர்ப்பிக்கப்படாததுடன் , மீள்பரிசீலனை செய்யப்பட்ட நிலுவைகள் மட்டுமே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | ஏற்றுக் கொள்கின்றேன். 2023 ஆம் ஆண்டு முதல் ஒருங்கிணைந்த காசப்பாய்ச்சல் கூற்றுக்கான ஒப்பீட்டுத் தகவல்கள் வெளிக்காட்டப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்து புள்ளிவிவர தகவல்களுக்கும் ஒப்பீட்டுத் தகவல்கள் வழங்கப்பட வேண்டும். |
| (ஈ) | சொத்து பொறி மற்றும் உபகரணங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன. | | |
| (i) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 7 இன் 22 ஆம் பந்தியின் பிரகாரம் சேர்த்தல்கள் மற்றும் மேம்படுத்தல் தொடர்பான மூலதனச் செலவுகள் உரிய சொத்துக் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டிய போதிலும், 8 பிராந்தியங்கள் தொடர்பாக ரூபா 92,774,812 பெறுமதியில் மேற்கொள்ளப்பட்ட மூலதனத் தன்மையான செலவுகள் வருமானச் செலவுகளாக கணக்குகளில் காட்டப்படடிருந்தது. | 2023 ஆம் ஆண்டில் திருத்துவதற்கு மற்றும் மூலதனமாக்கப்படுவதற்கும் குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிலையான செத்துக்களுடன் தொடர்பான சேர்த்தல்கள் மற்றும் மேம்படுத்தல் செலவுகள் மூலதனமாக்கப்பட வேண்டும். |
| (ii) | அதிகாரசபையின் பிராந்திய அலுவலகங்கள்,பிரிவுகள்,உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள் போன்றன அமைந்துள்ள காணிகள் இனங்காணப்பட்டு அவற்றின் பெறுமதி அதிகாரசபையால் 1984-1989 காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 64,320,853 கிரயமான 2 காணிகள் சொத்து பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் கணககீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கொழும்பு 10, டி.பி.ஜாயா மாவத்தையில் உள்ள இல. 493 மற்றும் 493/01 காணிகளின் மதிப்பீடு 2023 பெப்ரவரி 01 இல் பெறப்பட்டதால், 2023 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>கொழும்பு 10, டி.பி.ஜாயா மாவத்தையில் 500 ஆம் இலக்க காணியின் மதிப்பீட்டை மதிப்பீட்டுத் திணைக்களத்திடமிருந்து | அதிகாரசபையின் அலுவலகங்கள் மற்றும் இதர கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ள காணி மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட காணிகள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சேர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பெற்றுக் கொண்டு கணக்கீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.பிராந்திய அலுவலகங்களில் காணிகள் அளவீட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. மதிப்பீடு செய்யப்படுவதற்கு பல வருடங்கள் எடுக்கும் என்பதால், மதிப்பீடு செய்யப்படுகின்ற ஒழுங்கில் கணக்கீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (iii) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 7 இன் 49 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்து மற்றும் பொறி உபகரணங்களின் ஒரு பொருளை மீள்மதிப்பீடு செய்யும் போது, அந்த சொத்து வகுப்பு முழுமையாக மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் , சீ பிராந்திய குடியிருப்பு வணிக முகாமைத்துவ அலுவலகத்தின் மொத்தக்கிரயம் ரூபா 15,601,129 ஆன அலுவலக உபகரணங்களில் 2022 ஜனவரி 01 இல் ரூபா 11,725,422 கிரயமான அலுவலக உபகரணங்கள் மட்டுமே மீள்மதிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தன. அதன்படி, ரூபா 3,875,707 கிரயமான சொத்துக்களில் 25 சதவீதம் மீள்மதிப்பீட்டிற்கு உட்பட்டிருக்கவில்லை. வளவ குடியிருப்பு வணிக முகாமைத்துவ அலுவலகத்தில் 2021 ஜனவரி 01 இல் கிரயம் (சராசரி) ரூபா 15,655,004 ஆன இயந்திரங்களில் ரூபா 10,561,272 கிரயமான அலுவலக இயந்திரங்கள் மட்டுமே மீள்மதிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தன. அதன்படி, தொடர்புடைய சொத்துக்களில் 33 சதவீதம் அதாவது ரூபா 5,093,735 கிரயமான சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்படும்போது குறிப்பிட்ட சொத்து வகுப்பு முழுமையாக மீள்மதிப்பீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | தலைமை அலுவலகம் மற்றும் 7 பிராந்திய அலுவலகங்கள் தொடர்பான 366 வழக்குகள் தொடர்பாக, இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 8 இன் 100 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளியிடப்படவில்லை. அதிகாரசபைக்கு | 2023 ஆம் ஆண்டில் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 8 இன் 22 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பதற்கு மற்றும் | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிகழத்தக்க பொறுப்புகள் தொடர்பாக ஏற்பாடுகள் செய்யப்பட |

| | | |
|---|---|---|
| எதிரான 23 வழக்குகளுக்கு நிகழத்தக்க பொறுப்புக்களாக ரூபா 56,696,667 அடையாளம் காணப்பட்டு, அந்தப் பெறுமதி ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 8 இன் 22 ஆம் பந்தியின் பிரகாரம் தேவையான வகையில் ஏற்பாடுகள் இனங்காணப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2023 ஆம் ஆண்டில் நிகழத்தக்க பொறுப்புக்கள் தொடர்பான சுருக்கமான விளக்கமொன்றை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டியதுடன், ஏனைய பொறுப்புகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல்கள் செய்யப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் கொள்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மகாவலி ஒருங்கிணைந்த செயற்திட்டம், குடியிருப்பு வணிக முகாமைத்துவ அலுவலகம் - 2021 மார்ச் 16 ஆம் திகதி பீ பிராந்தியத்தின் கீழ் கொண்டு வரப்பட்டிருந்ததுடன், அதன் கீழ் மகாவலி ஒருங்கிணைந்த செயற்திட்டத்தில் மொத்தம் ரூபா 121,050,992 ஆன சொத்துக்கள் மற்றும் ரூபா 121,050,992 ஆன பொறுப்புக்கள் சுவீகரிக்கப்பட்டிருந்தன. 2022 ஜனவரி 01 இன் நிலுவைத் தொகையில் அதனுடன் தொடர்புடைய சீராக்கம் செய்யப்படடிருந்த போதிலும், இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 1 இன் 135 ஆம் பந்தியின் பிரகாரம் அதனுடன் தொடர்புடைய கணக்கீட்டுக் கொள்கை வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை. | அதனுடன் தொடர்புடைய சீராக்கங்களைச் செய்தமைக்கான கணக்கீட்டு கொள்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 1 இன் பிரகாரம் ஒன்றிணைக்கப்படுவதற்கான கொள்கை வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, அணைப் பாதுகாப்பு மற்றும் நீர்வள திட்டமிடல் செயற்திட்டத்திலிருந்து ரூபா 671,503,748, மொரகஹகந்த செயற்திட்டத்திலிருந்து ரூபா 536,539,275,(அணையின் பெறுமதி நீங்கலாக) காலநிலை பாதகமான பாதிப்பை குறைக்கும் செயற்திட்டத்திலிருந்து ரூபா 325,457,540 ஆன சொத்துக்கள் அதிகாரசபைக்கு பெறப்பட்டிருந்த போதிலும் , அந்த சொத்துக்களிலிருந்து மீளாய்வாண்டு வரை முறையே ரூபா 589,325,677, ரூபா 466,896,356 மற்றும் ரூபா 78,348,847 | அணைப் பாதுகாப்பு மற்றும் நீர்வளத் திட்டத் திட்டத்திலிருந்து பெறப்பட்ட சொத்துக்களில், 2022 திசெம்பர் 31 இல் ரூபா 5 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் மட்டுமே மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.<br><br>இதில், ரூபா 4 மில்லியன் பெறுமதியான | செயற்திட்டங்களிலிரந்து பெறப்படும் சொத்துக்கள் அடையாளம் காணப்பட்டு மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

ஆன சொத்துக்கள் மட்டுமே கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. அதன்படி, மொத்தம் ரூபா 398,929,683 ஆன சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

சொத்துக்கள் 2023 ஆம் ஆண்டில் அடையாளம் காணப்பட்டு, மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட்டுள்ளதுடன் மீதமுள்ள ரூபா 1 மில்லியன் சொத்துக்கள் அடையாளம் காணப்பட்டு மீள்மதிப்பீடு செய்யப்பட்டு 2023 ஆம் ஆண்டின் கணக்குகளில் சீராக்கம் செய்யப்படும்.

மொரகஹகந்த திட்டத்தில் பெறப்பட்ட சொத்துக்களில் இருந்து ரூபா 459.6 மில்லியன் சொத்துக்கள் அதிகாரசபைக்கு ஒதுக்கப்பட்டுள்ளதுடன் அவை கணக்கீடு செய்யப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின் காலம் மேலும் நீட்டிக்கப்பட்டுள்ளதால், நிலையான சொத்துகளின் கையளிப்பு மற்றும் தீர்ப்பனவு இன்னும் நடந்து கொண்டிருக்கின்றன. அந்த நடவடிக்கைகள் முடிவடைந்ததும் செயற்திட்டத்தில் இருந்து பெறப்பட்ட நிலையான சொத்துக்களை கணக்கீடு செய்யப்பட்டு முடிக்கப்பட முடியும்.

காலநிலை காலநிலை பாதகமான பாதிப்பை குறைக்கும் செயற்திட்டத்தால் வழங்கப்பட்ட சொத்துக்களில் கணக்கிடப்படாத ரூபா 102.2 மில்லியன் சொத்துக்கள் முறையாக அடையாளம் காணப்பட்டுள்ளன. 2023 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்யப்படும்.

| | | | |
|---|---|---|---|
| | | மீதமுள்ள சொத்துக்களும் சரிபார்க்கப்பட்டு அடையாளம் காணப்பட்டதன் பின்னர், எதிர்காலத்தில் கணக்கீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 13 இன் 20 ஆம் பந்தியின் பிரகாரம் முதலீட்டுச் சொத்தாக அங்கீகரிக்கப்பட வேண்டிய அதிகாரசபைக்கு சொந்தமான குத்தகைக்கு விடப்பட்டுள்ள 6534 ஹெக்டயர் அளவான காணி மதிப்பிடப்பட்டு நியமத்தின் 27 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | முதலீட்டுச் சொததுக்களாக அப்புறப்படுத்தப்பட்ட காணிகளுக்கான உரிய மதிப்பீட்டுப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு கணக்கீடு செய்யுமாறு அனைத்து குடியிருப்பு வணிக முகாமையாளர்களுக்கும் அறிவுறுத்தல் வழுங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் படி 2023 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தேய்மானக் கொள்கையின் பிரகாரம் சரியாக தேய்தானம் கணக்கீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | பிந்திய ஊழியர் நலன்கள் திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட நலன்களை செலுத்துதல் தொடர்பான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 19 இன் 63 ஆம் பந்திக்கு முரணாக சேவைக் காலம் 5 வருடங்களுக்கு மேற்படாத ஊழியர்கள் தொடர்பாக பணிக்கொடைகளுக்கான ஒதுக்கீடுகள் எதுவும் செய்யப்படவில்லை. அதன் பிரகாரம் 1 முதல் 5 வருடங்கள் வரை சேவையாற்றிய மகாவலி பாதுகாப்புப் படையைச் சேர்ந்த 103 ஊழியர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டிய ரூபா 6,338,112 குறைவாக பணிக்கொடைக்காக ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அதன் காரணமாக நட்டம் அத்தொகையால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன். 2023 ஆம் ஆண்டின் நித்க்கூற்றுக்களில் குறிப்புக்களின் மூலம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சேவைக் காலம் 5 வருடங்களுக்கு மேற்படாத ஊழியர்கள் தொடர்பாகவும் பணிக்கொடை ஒதுக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2019 திசெம்பர் 31 இல் ரூபா 34,750,000 மதிப்புள்ள 4 வாகனங்கள் ரூபா 41,794,209 ஆக ரூபா 7,044,209 அதிகமாகக் குறிப்பிடப்பட்டுள்ளமைளால் மீளாய்வாண்டின் இறுதியில் அந்த சொத்துக்களின் எழுதப்பட்ட பெறுமதி | PF–7750 ஆம் இலக்க வாகனம் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில; PG-7750 என தவறாக | மீள்மதிப்பீட்டுப் பெறுமதி மற்றும் தேய்மானம் சரியாக கணக்குகளில் சீராக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 2,829,138 மற்றும் திரண்ட தேய்மானம் ரூபா 4,215,171 அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் குறிப்பிட்ட தேய்மானம் ரூபா 1,408,862 அதிகமாகக் காட்டப்பட்டதன் காரணமாக ஆண்டிற்கான நட்டம் அதே அளவினால் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது. | உள்ளிடப்பட்டு, அது திருத்தப்பட்டுள்ளது. மொரகஹகந்த செயற்திட்டம் மற்றும் காலநிலை பாதகமான பாதிப்பை குறைக்கும் செயற்திட்டத்தில் இருந்து இரண்டு வாகனங்கள் வீதம் பெறப்பட்டுள்ளன. அவ்வாகனங்கள் 2019 ஆம் ஆண்டளவில் மகாவலி அதிகாரசபையிடம் பௌதீகமாக கையளிக்கப்பட்ட போதிலும், அவை சுமார் ஒரு வருடத்தின் பின்னர் முறையான ஆவணங்கள் மூலம் அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் அச்சந்தர்ப்பத்தில் செயற்திட்டங்களால் வழங்கப்பட்ட ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிகளின் அடிப்படையில் அவ்வாகனங்கள் கணக்கிடப்பட்டன. எனவே, தற்போது கணக்கிடப்பட்ட பெறுமதிகள் திருத்தப்பட்டு 2023 ஜூலை 05 இல் சரியான பெறுமதி மற்றும் தேய்மான பெறுமதி நாளேட்டு இலக்கம் 12 இன் மூலம் திருத்தப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (உ) | அதிகாரசபையின் தேய்மானக் கொள்கையின்படி, கட்டிட மதிப்பில் 2.5 சதவீதம் ஆண்டுதோறும் தேய்மானம் செய்யப்பட வேணடிய போதிலும், தலைமை அலுவலகத்துக்குச் சொந்தமான கிரயம் ரூபா 619,112,600 மதிப்புள்ள கட்டிடங்கள் ஒவ்வொன்றும் 5 சதவீதம் வீதம் தேய்மானம் செய்யப்பட்டிருந்தன. இதன் விளைவாக, ரூபா 15,477,815 ஆக இருக்க வேண்டிய தேய்மான பெறுமதி ரூபா 30,955,629 ஆக ரூபா 15,477,815 அதிகமாகக் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் , அந்த | ஏற்றுக் கொள்கின்றேன். 2023 ஆம் ஆண்டில் நாளேட்டுக் குறிப்புக்களின் மூலம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தேய்மானக் கொள்கையின் பிரகாரம் சரியான தேய்மானம் கணக்கீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டுக்கான நட்டமும் அதே அளவினால் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது. 15 சதவீதம் தேய்மான விகிதத்தின் கீழ் காணப்பட்ட , இயந்திரங்கள் பொறிகளின் கீழ் காட்டப்பட வேண்டிய 14 பொருட்கள், 20 சதவீதம் தேய்மான விகிதத்திற்குரிய வாகனங்களின் கீழ் காட்டப்பட்டதால் மொத்தம் ரூபா 3,249,977 ஆன தேய்மானம் அதிகமாக காட்டப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் நட்டமும் ரூபா 3,249,977 ஆல் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | தலைமை அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்களில் நடைமுறைக் கணக்கு நிலுவைகளின் கீழ் 3001 நிதியக் கணக்கில் காட்டப்பட்டுள்ள பல ஆண்டுகளாகக் காணப்பட்டு வருகின்ற கூட்டுத்தொகை ரூபா 554,135,228 ஆன வரவு மீதி மற்றும் கூட்டுத்தொகை ரூபா 509,098,933 ஆன செலவு மீதி உறுதிப்படுத்தப்பட்டு தொடர்புடைய கணக்கீட்டு சீராக்கங்கள் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஒவ்வொரு வருடத்தின் தொடக்கத்திலும், வரவு மீதி மற்றும் செலவு மீதிகள் அதற்கு முன்னைய ஆண்டின் இறுதி நடைமுறைக் கணக்கு மீதிகளுடன சீராக்கம் செய்யப்பட்டடுள்ளன. | நிதியமாகக் குறிப்பிடப்பட்ட வரவு மற்றும் செலவு மீதிகளைத் தீர்ப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |
| (எ) | අමප/19/2770/104/083 ஆம் இலக்க 2019 ஒக்டோபர் 30 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அதிகாரசபைக்கு சொந்தமான 99 சதவீத பங்குகளை வைத்திருக்கும் மகாவலி கன்சல்ரன்ஸி பியூரோ (தனியார்) கம்பனி விவசாயம், கிராமிய, பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், மீன்பிடி மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சிற்கு 2020 திசெம்பர் 31 இல் மாற்றப்படடிருந்தது. எவ்வாறாயினும் அதற்கான ரூபா 63,850 பெறுமதியான 6385 பங்குகளின் முதலீடு 2022 திசெம்பர் 31 இல் இலங்கை மகாவலி அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் தொடர்ந்தும் குறிப்பிடப்பட்டிருந்ததுடன், மேற்படி முதலீட்டை மாற்றுவதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | முதலீடுகளை கையளித்தல் தொடர்பான நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்படுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | இந்த பங்குகளின் கையளித்தல் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல்கள் செய்யப்பட வேண்டியதுடன், அதற்கேற்ப கணக்கீட்டு சீராக்கங்கள் செய்யப்பட வேண்டும். |

**1.5.4 அங்கீகரிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திகன குடியிருப்பு வணிக முகாமைத்துவ | காணி ஆணையாளர் பெற | வேண்டிய |

| | | |
|---|---|---|
| அலுவலகத்திற்கான நிலுவை வரி வருமானம் ரூபா 46,478,749 முந்தைய ஆணடின் சீராக்க கணக்கின் ஊடாக மற்றும் சீ வலயத்தின் நிலுவை வரி வருமானம் ரூபா 29,740,601 ஆனது காணி பயன்பாட்டுக் கட்டண வருமானக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு அங்கீகாரமின்றி பதிவளிக்கப்பட்டிருந்தது. | திணைக்களத்தின் 2020 மே 20 ஆம் திகதிய சுற்றறிக்கை இலக்கம் 2020/6 இன் அறிவுறுத்தலின் அடிப்படையில், நிலுவை வரித்தொகையாக ரூபா 46,478,749 ஆன தொகை பதிவளிக்கப்பட்டிருந்தது. அங்கீகாரமின்றி நிலுவை வரி மற்றும் காணி பயன்பாட்டுக் கட்டணம், வருமானத்திலிருந்து பதிவளிக்கப்படவில்லை என்பதுடன் கணக்கீட்டு தவறொன்று திருத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துக் கொள்கிறேன். அது தொடர்பான முறையான தகவல் சமர்ப்பிக்கப்படும் வரை நாளேட்டு குறிப்பொன்றின் மூலம் திருத்தப்பட்டுள்ளது. | வருமானத்தை அறவிடுவதற்கு எடுக்கப்பட வேண்டிய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும்.பதிவளிப்பதற்குத் தேவையான அதிகாரம் பெறப்பட வேண்டும். |

### 1.5.5 பொருத்தமற்ற பெறுமதி கணிப்பீடு அல்லது மதிப்பீடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் 49 ஆம் பந்தியின் பிரகாரம் மூலதன மற்றும் வருமான மானியங்கள் மற்றும் சொத்து மானியங்கள் பெறப்பட்டவுடன் உடனடியாக வருமானமாக அங்கீகரிக்கப்படடிய போதிலும், அதன்படி நடவடிக்கை எடுக்கப்படாமையால் அதிகாரசபைக்கு 03 வெளிநாட்டு செயற்திட்டங்களில் இருந்து பெறறுக் கொள்ளப்பட்ட சொத்துக்களுக்கான பண்டமாற்று அல்லாத கொடுக்கல வாங்கல் பெறுமதி ஆயுட் காலத்தின் பிரகாரம் பிற்போடப்பட்டு , 2022 திசெம்பர் 31 இல் பிற்போடப்பட்ட வருமானம் ரூபா 83,565,000 மற்றும் இன்னும் வருமானமாக அங்கீகரிக்கப்பட வேண்டிய ரூபா 39,095,160,211 செலுத்த வேண்டிய மீதியின் கீழ் காட்டப்பட்டிருந்தது. இதற்கு | செயற்திட்டங்களில் இருந்து பெறப்பட்ட/பெறப்பட வேண்டிய சொத்துக்கள் கணக்கீட்டு நியமங்களின் மூலம் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின்படி கணக்கீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பண்டமாற்று அல்லாத கொடுக்கல் வாங்கல் பெறுமதி பண்டமாற்று அல்லாத கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்பான நியம இலக்கம் 11 இன் பிரகாரம் அதே ஆண்டில் வருமானமாக அங்கீகரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேலதிகமாக பொது திறைசேரியிலிருந்து அதிகாரசபைக்கு பெறப்பட்ட மூலதன மானியங்கள் தொடர்பான ரூபா 3,204,892,000 மீளாய்வாண்டில் பிற்போடப்பட்ட வருமானம் மற்றும் இன்னும் வருமானமாக அங்கீகரிக்கப்பட வேண்டிய திரட்டப்பட்ட நிதியத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட ரூபா 70,823,574 ஆகியவை நியமத்தின் பிரகாரம் கணக்கு வைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | அதிகாரசபையால் கட்டுப்பாடு மற்றும் பராமரிப்பு செய்யப்படுகின்ற 6 வலயங்களில் 9,237.9 கி.மீ நீளமுள்ள கால்வாய்கள் ரூபா 74,989,140,000 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த போதிலும் அந்த கால்வாய்கள் மதிப்பீட்டு தொழிற்துறை தகுதிகளுடன் கூடிய அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டாளர் அல்லது மதிப்பீட்டு சபையொன்றினால் மேற்கொள்ளப்படாத காரணத்தால் மதிப்பீட்டுப் பெறுமதியின் ஏற்றுக்கொள்ளல் சவாலுக்கு உட்பட்டிருந்தது. | முக்கிய அணைகள் மற்றும் நீர்த்தேக்கங்கள், ஏரிகள், சாலைகள் மற்றும் தொடர்புடைய கால்வாய்கள் போன்றவை பின்வரும் வழிகாட்டுதல்களின் கீழ் தொழிற்துறை தகுதியுள்ள பட்டயப் பொறியியலாளர்களால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.<br><br>I. சிறிய, நடுத்தர மற்றும் பெரிய தாங்கிகளின் கட்டுமானத்திற்குப் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களின் அளவை நடைமுறையில் உள்ள அலகு விலையால் பெருக்குவதன் மூலம்.<br><br>II.சாலைகள், பிரதான கிளைகள் மற்றும் வயல் கால்வாய்கள் 1 கிமீ கட்டுமானத்திற்கு பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களின் அளவை நடைமுறையில் உள்ள அலகு விலையால் பெருக்குவதன் மூலம். | அதிகாரசபைக்குச் சொந்தமான கால்வாய்கள் தொழிற்துறை தகுதிகளுடன் கூடிய அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டாளர் அல்லது மதிப்பீட்டு சபையொன்றினால் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |

### 1.5.6 கணக்காய்விற்கான எழுத்து மூலமான சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வச் சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் வ/ப மகாவலி கால்நடை வள வணிக கம்பனியின் முதலீடு | 10,000,000 | பங்குச் சான்றிதழ், மறுசீரமைப்பு தீர்மானம் எடுக்கப்படுகின்ற முறைமை, பணிப்பாளர் சபை மற்றும் அமைச்சரவை தீர்மானங்கள் | இது தொடர்பான விபரங்கள் கண்டறியப்பட்டு எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. | முதலீடுகளை உறுதிப்படுத்துவதற்கு தேவையான தகவல்கள் கணக்காய் விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரசபையின் சொத்துக்கள் ஏனைய தரப்பினரால் பயன்படுத்தப்படுவதன் மூலம் கிடைக்கும் வருமானம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 10 இன் 33 ஆம் பந்தியின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் , தம்புத்தேகம மற்றும் வளவ குடியிருப்பு வணிக முகாமைத்துவ அலுவலகங்களின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் கருங்கல் செயற்திட்டங்களுடன் தொடர்புடைய முறையே 14 வர்த்தகர்கள் மற்றும் 16 வர்த்தகர்களிடமிருந்து 2022 திசெம்பர் 31 இல் அறவிடப்பட வேண்டிய காணி பயன்பாட்டுக் கட்டணமான ரூபா 24,692,047 மற்றும் ரூபா 893,269,386 உம், லங்கா உரக் கம்பனியிடமிருந்து மற்றும் மகாவெலி கால்நடை வள வணிகக் கம்பனியிடமிருந்து 2022 திசெம்பர் 31 இல் பெறப்பட வேண்டிய முறையே ரூபா 2,352,000 மற்றும் ரூபா 26,100,000 ஆன வரி வருமானமும் அங்கீகரிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக சரிபார்க்கப்பட்டு பெறப்பட வேண்டிய வருமானமாக அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். வரி ஆவணங்கள் நாளதுவரையாக்கப்பட்டு வருவதுடன் 2023 ஆம் ஆண்டின் கணக்குகளுக்கு சீராக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>மகாவலி கால்நடை வள வணிக (தனியார்) கம்பனிக்கு இந்தப் பண்ணை முறையாக குத்தகைக்கு வழங்கப்படாததால், குத்தகைக்கு விடப்பட்டதால் பெறவேண்டிய வருமானம் கணக்குகளில் சீராக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். | பெற வேண்டிய வருமானத்தை இனங்கண்டு அவற்றை முறையாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட. வேண்டும். வெளி தரப்பினரிடமிருந்து எடுக்கப்பட வேண்டிய வருமானம் உடனடியாக அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | 2020 திசெம்பர் 20 ஆம் திகதிய අමප/20/1852/317/012 ஆம் இலக்க அமைச்சரவை மூலம் இந்த நிலுவையில் உள்ள காணி பயன்பாட்டுக் கட்டணத்தில் 25 சதவீதத்தை மட்டுமே வசூலிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, அறவிடப்பட வேண்டிய காணி பயன்பாட்டுக் கட்டணம் ரூபா 223,317,346 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 49,772,684 2023 ஒக்டோபர் 01 இல் அறவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.. | |

**1.6.2 செலுத்த வேண்டிய பணம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் செலுத்த வேண்டிய நிலுவைகளின் மொத்தம் ரூபா 39,760,813,000 ஆக இருந்தது. அதில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட செலுத்த வேண்டிய நிலுவைகளின் மொத்தம் ரூபா 161,080,000 ஆக இருந்ததடன் , தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலக புத்தகங்களில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 173,520,378 ஆக இருந்தமையால் ரூபா 12,440,378 ஆன வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது. இந்த் செலுத்த வேண்டிய நிலுவையின் கூட்டுத்தொகையில் 98.6 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 39,231,461,000 ஆன தலைமை அலுவலகத்தின் நானாவித கடன்பட்டோர் மீதிகளுக்கான அட்டவணையொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | இந்த மீதிகள் தொடர்பான பகுப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு 2023 ஆம் ஆண்டின் நிதிக்4ற்றுக்களுடன் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் காட்டப்படுகின்ற மீதி மற்றும் பிராந்திய மிதிகளின் கூட்டுத்தொகை ஒத்திருக்க வேண்டுமென்பதால், தேவையான சீராக்கங்களுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். கணக்காய்விற்கு தேவையான அட்டவணைகளைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 3 மகாவலி வலயங்களில் மேற்கொள்ளப்பட்ட 3 நிர்மாணங்களுக்காக 2 அரச நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய | இந்தத் தொகையில் ரூபா 2.9 மில்லியன் 2022 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டுள்ளதுடன் | அனைத்து பொறுப்புகளும் இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 22,819,672 நிதிக்கூற்றுக்களில் காட்டப்படவில்லை. | மீதமுள்ள தொகை (6.3-2.9) ரூபா 3.04 மில்லியன் 2023 ஆம் ஆண்டில் ஒரு நாளேட்டுப் பதிவின் மூலம் செலுத்த வேண்டிய பெறுமதியொன்றாக கணக்கிடப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டில் செலுத்த வேண்டிய மீதியாக கணக்கீடு செய்யப்படும். | காட்டப்பட வேண்டும். |
| (இ) | அதிகாரசபையால் திகன குடியிருப்பு வர்த்தக முகாமைத்துவ அலுவலகத்திற்காக கையகப்படுத்தப்பட்ட 126.23 ஏக்கர் காணிக்காக 2018 ஆம் ஆண்டில் நட்டஈடு செலுத்தப்பட்டதன் பின்னர் 2022 திசெம்பர் 31 இல் செலுத்த வேண்டிய நிலுவை வட்டித் தொகை ரூபா 16,252,018 மற்றும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு செலுத்த வேண்டிய வரித் தொகை. ரூபா 2,006,667 கணக்கீடு செய்யப்படவில்லை. 2022 ஆம் ஆண்டிற்கான 2023 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட சீ வலயத்தின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கான பழுதுபார்ப்புச் செலவினங்கள் மற்றும் ரத்கிந்த விதைப் பண்ணையின் 2022/2023 பெரும் போகத்திற்காக செலுத்தப்பட்ட கொடுப்பனவுகளின் கூட்டுத்தொகை ரூபா 3,692,588 ஆனது 2022 திசெம்பர் 31 இல் செலுத்தப்பட வேண்டியவைகளாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டில் நட்டஈடு செலுத்தப்பட்டதன் பின்னர் 2022 திசெம்பர் 31 இல் செலுத்த வேண்டிய நிலுவை வட்டித் தொகை ரூபா 16,252,018 மற்றும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 2,006,667 வரித் தொகை 2022 திசெம்பர் 31 வரை முறையாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை அதனால் கணக்கீடு செய்யப்படுவதற்கு முடியவில்லை. 2023 ஆம் ஆண்டில், நிதிக்கூற்றுக்களுடன் கணக்கீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அனைத்து செலுத்த வேண்டிய செலவுகளும் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6.3 முற்பணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரம்பகென் ஓயா குடியிருப்பு வணிக முகாமைத்துவப் பிரதேசத்தில் கல்வலயாய மஹாவலி கிராமத்தில் வீதிகளை தயாரித்தல் மற்றும் வயல் காணிகளை சமன்படுத்துவதற்காக அம்பாறை நீர்ப்பாசன பணிப்பாளருக்கு 2013-2014 காலப்பகுதியில் 05 தடவைகளில் ரூபா 11 மில்லியன் முற்பணம் வழங்கப்பட்டது. அந்த | இலங்கை மகாவலி அதிகாரசபை அனைத்து கொடுப்பனவுகளையும் செய்துள்ளதுடன் மீதி நிலுவைகள் எதுவும் இல்லை என்பதுடன் அது தொடர்பான பகுப்பாய்வு அறிக்கையானது நீர்ப்பாசன பணிப்பாளரின் (அம்பாறை) | நீர்ப்பாசன பணிப்பாளர் விசாரணை செய்து உடனடியாக முற்பணம் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| முற்பணத் தொகையில் ரூபா 8.1 மில்லியன் தொகையொன்று 2019/2020 ஆண்டுகளில் தீர்க்கப்பட்டிருந்ததுடன், ரூபா 2.9 மில்லியன் தொகையொன்று 2023 ஏப்ரல் 28 ஆம் திகதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | DI/AMP/W/06/WG/01/2023 ஆம் இலக்க மற்றும் திகதிய கடிதம் மூலம் வழங்கப்பட்டுள்ளது. அதன் செயல்திறனை முறையாக உறுதிப்படுத்தியதன் பின்னர் தீர்ப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1981 இன் 27 ஆம் இலக்க காணி அபிவிரத்தி (திருத்திய) சட்டத்தின் 72 ஆம் பிரிவு | காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்போது காணி அளவைத் திட்டங்களை தயாரித்து அல்லது உரிய காணியை தெரிவு செய்து அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேணடிய போதிலும், 2014 ஆம் ஆண்டில் சீ வலயத்திற்குட்பட்ட ஹிராதுருக்கோட்டை பிரதேச அலுவலகத்தில் நடைபெற்ற காணி கச்சேரியில் தெரிவு செய்யப்பட்ட 99 பேருக்கு மேற்படி தேவைப்பாடுகளுக்கு முரணாக அல்லது காணி குறிப்பிடப்படாமல் காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. | காணி அபிவிருத்தி (திருத்தம்) சட்டத்தின் 72 ஆம் பிரிவின் பிரகாரம் மகாவலி சீ வலயத்தின் ஹிராதுருக்கோட்டை பிரிவில் 2014 ஆம் ஆண்டில் வரையறுக்கப்பட்ட காணி கச்சேரியொன்று நடாத்தப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்கு எல்லைகள் வரையறுக்கப்பட்டு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படடு பின்னர் எல்லைகள் சுட்டிக்காட்டப்பட்டு காணிகள் வழங்கப்பட்டன. ஆனால் ஹொபரிய, ரத்கிந்த, தெல்தெனிய மற்றும் உல்ஹிட்டிய ஆகிய கிராமங்களில் உள்ள 184 தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்கு காணிகளின் எல்லைகள் சுட்டிக்காட்டப்பட்டு கையளிக்கப்படவில்லை. 2014 ஆம் ஆண்டு முதல் காணிகள் சுட்டக்காட்டப்படாததுடன் 2021 ஆம் ஆண்டில் அளவீட்டுப் பணிகள் தொடங்கப்பட்ட போதிலும், அங்கு எழுந்த | காணி அனுமதிப்பத்திரங்கள் சட்டத்தின் விதிகளின்படி வழங்கப்படுவதற்கு பொருத்தமான காணிகளைத் தேர்ந்தெடுத்து ஆய்வுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டதன் பின்னர் வழங்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | எதிர்ப்புக்கள் காரணமாக நிறுத்தப்பட்டது. எவ்வாறாயினும், அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட மக்களுக்கு காணிகளை வழங்குவதற்காக காணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதி பிரமாணம் இலக்கம் 371(2)(இ) | கந்தகாடு மற்றும் கிரந்துருகோட்டையில் மின்வேலி அமைப்பதற்கு மற்றும் எச் வலயத்தில் மீன்வளர்ப்பு நிலையம் மற்றும் குளங்கள் அமைப்பதற்கும் பணிப்பாளருக்கு (ஆராய்ச்சி மற்றும் சிறப்புச் செயற்திட்டங்கள்) ரூபா 24,239,319 ஆன முற்பணத்தொகை 2021 ஏப்ரல் 21, 2021 மே 18 மற்றும் 2021 திசெம்பர் 27 ஆகிய திகதிகளில் வழங்கப்பட்டிருந்த போதிலும், இந்த முற்பணம் கணக்காய்வுத் திகதியான 2023 மே 19 வரை, 02 ஆண்டுகளாக தீர்க்கப்படாதிருந்ததுடன், அது தொடர்பான பணிகள் முறையாக நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். மகாவலி பீ வலயத்தில் கந்தகாடு பண்ணையைச் சுற்றி கட்டப்பட்டுள்ள யானை வேலி மற்றும் மீன்வளர்ப்பு நிலையம் மற்றும் எச் வலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட மண் குளங்கள் ஆகிய செயற்திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட முற்பணத்தை தீர்ப்பதற்கு சம்பந்தப்பட்ட பிரிவுகளினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் போதுமானதாக இல்லாததால், அதை முறைப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. சீ வலயத்தைச் சேர்ந்த விவசாய் பயிற்சி நிலையத்தைச் சுற்றி அமைக்கப்பட்ட தொங்கு மின்வேலியில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டு அதை அதிகாரசபைக்கு கையேற்பதற்கு முடியாதிருந்தமையால் அது தொடர்பாக ஆய்வு செய்து அறிக்கையிடுவதற்கு விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அக்குழுவின் அறிக்கை பெறப்பட்டதன் பின்னர் மேற்கொண்ட பணிகள் மேற்கொள்ளப்படும். | செயல்நிமித்த முற்பணங்களை வழங்கும்போது நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். முற்பணங்கள் வழங்கப்பட்ட பணிகள் முடிவடைந்து தீர்ப்பதற்கு முன்னர் மீண்டும் முற்பணங்களை வழங்கப்பட்டமை தொடர்பாக பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 சுற்றறிக்கையின் 9.4 ஆம் பந்தி மற்றும் 2021 நவம்பர் 17 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மூலம் நிறுவப்பட்ட செயற்பாட்டு கைநூல் 3.5 ஆம் பந்தி | அமைச்சரவை அங்கீகாரமின்றி வெளி நிறுவனங்களுக்கு 2020 முதல் 2023 வரையிலான காலப்பகுதியில் விடுவிக்கப்பட்ட 45 அதிகாரிகள்/ ஊழியர்களுக்கு செலுத்தப்பட்ட சம்பளம், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான பங்களிப்புகள் மற்றும் மேலதிக நேர கொடுப்பனவுகள் முறையே ரூபா 34,867,475, ரூபா 5,440,787 மற்றும் ரூபா 15,851,797 ஆக இருந்தன. அதில் 2023 மே 15 வரை ரூபா 1,495,003 மட்டுமே மீள்நிரப்பப்படுவதற்கு முடியுமாக இருந்தது. அதில் 31 ஊழியர்கள் மகாவலி பாதுகாப்பு உத்தியோகத்தர்களாக இருந்ததுடன், 6 ஆவது ஓய்வுபெற்ற ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவு, பிரதமர் அலுவலகம், நீர்ப்பாசன அமைச்சு, காணி இராஜாங்க அமைச்சு, மகாவலி இராஜாங்க அமைச்சு மற்றும் கிராமிய வயல்வெளிகள் மற்றும் அதனுடன் இணைந்த நீர்த்தேக்கம் மற்றும் நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சு ஆகிய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தனர். | வெளி நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்ட பாதுகாப்புப் படையின் பாதுகாப்பு ஒழுங்குமுறை அதிகாரிகளில் ஓய்வுபெற்ற ஜனாதிபதிக்கு விடுவிக்கப்பட்ட 05 பேர் மற்றும் நீர்ப்பாசன அமைசசிற்கு விடுவிக்கப்பட்டுள்ள 14 பேர் தவிர்ந்த ஏனைய நிறுவனங்களுக்கு இணைக்கப்பட்ட அதிகாரிகள் மகாவலி அதிகார சபையின் கடமைகளுக்கு சமூகமளித்திருந்தனர்.<br><br>வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் பிரதமர் அலுவலகத்திற்கு விடுவிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு செலவழிக்கப்பட்ட பணத்தின் மீளளிப்பு மற்றும் நீர்ப்பாசன அமைச்சுக்கு விடுவிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு செலவிடப்பட்ட பணம் நீர்ப்பாசன அமைச்சின் செயலாளரின் MI/F/26/MA/2022 ஆம் இலக்க மற்றும் 2022 செப்டம்பர் 05 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் நீர்ப்பாசன அமைசசிற்கு விடுவிக்கப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கு செலவிடப்பட்ட தொகை மீளளிப்பு செய்யப்படவில்லை. ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்ட பாதுகாப்பு ஒழுங்குமுறை அதிகாரிகள் சார்பில் பணத்தை மீளப் பெறுவதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு பதிவுத் தபாலில் கடிதம் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் அமைச்சரவையின் அங்கீகாரமின்றி ஏனைய நிறுவனங்களுக்கு ஊழியர்களை விடுவிக்கக் கூடாது. விடுவிக்கப்பட்ட பணியாளர்கள் தொடர்பாக செலுத்தப்படுகின்ற ஊதியங்கள் மீண்டும் அறவிடப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | அனுப்பப்பட்ட போதிலும் அதற்கு எவ்வித பதிலும் பெறப்படவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,485,127,000 ஆன நட்டமாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 665,841,000 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 2,150,968,000 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இந்த பின்னடைவிற்கு அரசின் மூலதன மானியம் ரூபா 2,948,325,000 ஆல் குறைவடைந்தமை மற்றும் மறுசீரமைப்பு , சமூக அபிவிருத்தி மற்றும் பராமரிப்புச் செலவுகள் ரூபா 1,232,838,000 ஆல் குறைவடைந்த போதிலும் பெறுமானத்தேய்வு செலவுகள் ரூபா 907,448,000 ஆல் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 பொருளாதாரமற்ற கொடுக்கல் வாங்கல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரசபைக்கு சொந்தமான உத்தியோகபூர்வ இல்லங்கள் பயன்படுத்தப்படாமல் பல பிரதேசங்களில் காணப்பட்டபோதிலும் 15 அதிகாரிகளுக்கு அவர்கள் தனிப்பட்ட ரீதியாக வாடகைக்கு எடுத்த வீடுகளுக்காக 2022 ஆம் ஆண்டில் வீட்டு வாடகையாக ரூபா 3,098,129 செலுத்தப்பட்டிருந்தது. | வதிவிட வணிக முகாமையாளர் ஈ வலயமானது 2019 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு ஹசலக, மினிபே, வில்கமுவ பிரதேசங்களில் விவசாயம் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக வதிவிட வணிக முகாமையாளர் விக்டோரியா அலுவலகத்தின் ஊழியர்கள் ஈ வலயத்திற்கு நியமிக்கப்பட்டனர். ஆனால் ஈ வலயத்தில் வில்கமுவ மற்றும் மினிபே ஆகிய இடங்களில் நிறுவப்பட்ட மகாவலி கட்டிடங்கள் இல்லாததால், அலுவலகங்கள் மற்றும் குடியிருப்பு வசதிகளுக்காக தனியார் வாடகை வீடுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. இந்த நோக்கத்திற்காக 2021/04 ஆம் இலக்க மற்றும் 2021 ஏப்ரல் 08 ஆம் திகதிய திணைக்கள பெறுகை அங்கீகாரத்தின் அடிப்படையில் வீட்டு வாடகை செலுத்தப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். | 2009 திசெம்பர் 24 ஆம் திகதிய 2009/12/04 ஆம் இலக்க நிர்வாகச் சுற்றிக்கையின் கட்டளைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 இனங்காணப்பட்ட நட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்ளுர் விவசாய முதலீட்டு ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்து மகாவலி பீ பிராந்தியத்தின் விவசாய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் விவசாய பயிர் உற்பத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்காக 540 ஏக்கர் அளவிலான காணியொன்று முத்துவெல்ல வெலிகந்த பிரதேசத்தில் இருந்து வழங்கப்படுவதற்கு 2020 ஆம் ஆண்டில் திட்டமிடப்படடிருந்தது. திட்டமிடப்பட்ட ஆண்டிலிருந்து கணக்காய்வு திகதியான 2023 மே 31 வரை 03 வருடங்கள் 05 மாதங்கள் கடந்துவிட்ட போதிலும், எந்த முதலீட்டுத் நிகழ்ச்சித்திட்டமும் செயல்படுத்தப்படவில்லை. இந்த முதலீட்டுத் நிகழ்ச்சத்திட்டங்களின் சுற்றுச்சூழல் பாதிப்புகளை மதிப்பீடு செய்வதற்காக ரூபா 2,619,000 ஆன ஒப்பந்தமொன்று கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வு திகதி வரை அதில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 2,093,200 அதிகாரசபைக்கு நட்டமொன்றாக காணப்பட்டது. | முத்துவெல்ல செயற்திட்டத்தின் சுற்றாடல் ஆய்வுகளின் கள வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதுடன் கொரோனா வைரஸ் பரவல், அருகில் வசிப்பவர்கள் மற்றும் காணியில் குடியேறியவர்களின் எதிர்ப்புக்கள் மற்றும் மகாவலி அதிகாரசபையின் திட்டங்களை தயாரிப்பதில் தாமதம் போன்ற காரணங்களால் அதன் பணிகளை தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதில் சிக்கலான நிலைமையொன்று ஏற்பட்டிருந்தது. கொழும்பு பல்கலைக்கழகத்தினால் இறுதி IEE அறிக்கையை 2023 ஜுலை 09 அன்று மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்திற்கு சுற்றுச்சூழல் அங்கீகாரம் பெறப்பட்டதன் பின்னர் செயற்திட்டததின் மேற்கொண்ட அபிவிருத்தி பணிகளைத் தொடர முடியும். | சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீட்டு அறிக்கை முடிக்கப்பட்டு செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான இயலுமை மீண்டும் கருத்திற் கொள்ளப்பட வேண்டும். |

**3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகாரசபையின் வளங்களைப் பயன்படுத்தி ஆரம்பிக்கப்பட்ட மகாவலி கால்நடை வள மற்றும் விவசாய வணிக (தனியார்) கம்பனி செயற்திட்டக் குழுவினால் தெரிவுசெய்யப்பட்ட வெளியார் முதலீட்டாளர்களுடன் அரச தனியார் கூட்டு முயற்சி வணிகமொன்றாக மறுசீரமைப்பதற்காக 2018 செப்டம்பர் 18 ஆம் திகதிய අමප/18/2083/803/031 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டு | இக்கம்பனியை பொது தனியார் கூட்டு முயற்சி வணிகமொன்றாக (PPP) மறுசீரமைப்பதற்காக முதலீட்டாளரை தெரிவு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.<br><br>மேலும், ”கம்பனியின் சொத்துக்கள் மதிப்பீட்டைப் பெறுவதற்கு” மற்றும் ” மூன்று வெளியாட்களுக்கு | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அரச தனியார் கூட்டு முயற்சி வணிகமொன்றாக மறுசீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்காய்வு திகதியில் 4 ஆண்டுகள் கடந்து விட்ட போதிலும் அரச தனியார் கூட்டு முயற்சி வணிகத்தை தொடங்குவதற்கு முடியாதிருந்தது. | ஒதுக்கப்பட்ட கம்பனியின் பங்குகளை மீண்டும் மகாவலி அதிகாரசபையிடம் ஒப்படைத்தல்” என்பவற்றுக்காக அரச நிறுவனங்களுடன் இணைந்து செயற்பட வேண்டியிருந்தமையால் அந்த பணிகள் முடிவடைந்தவுடன் அமைச்சரவை நியமிக்கப்பட்டு கலந்துரையாடல் ஒருமித்த குழுக் கூட்டம் நடாத்தப்பட்டு அடுத்தகட்ட பணிகள் மேற்கொள்ளப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | |
| (ஆ) | மகாவலி கால்நடை வள மற்றும் விவசாய வணிக (தனியார்) கம்பனியால் பயன்படுத்தப்பட்டு வந்த இலங்கை மகாவலி அதிகாரசபைக்கு சொந்தமான தெமட்டகொட, பேஸ்லைன் வீதியில் அமைந்துள்ள 0.2139 ஹெக்டெயர் காணி மற்றும் கட்டிடங்கள் 2020 ஆம் ஆண்டில் மீண்டும் மகாவலி அதிகார சபைக்கு மாற்றப்பட்ட போதிலும், அச் சொத்து முறையாக கையளிக்கப்படுவதற்கு மற்றும் கையேற்கப்படுவதற்கு அக்கம்பனி மற்றும் அதிகாரசபையால் நடவடிகை எடுக்கப்படவில்லை. இக்காணி 2018 ஆம் ஆண்டில் ரூபா 296 மில்லியன் ஆகவும், கட்டிடம் ரூபா 619 மில்லியன் ஆகவும் மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பிடப்பட்டிருந்தன.வளாகத்தில் அமைந்துள்ள கட்டிடங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்காக கோரப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2023 மே 16 ஆம் திகதி வரை சமர்ப்பிக்கப்படவில்லை. 2023 மே 15 ஆம் திகதி கணக்காய்வினால் இந்த வளாகம் பௌதீக ரீதியாக ஆய்வு செய்யப்பட்டபோது காணியில் அமைந்துள்ள கட்டிடங்கள் மீண்டும் பயன்படுத்தப்பட முடியாத வகையில் அழிக்கப்பட்டிருந்தமை மற்றும் கட்டிடங்களில் மரத்தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் எதுவும் இருக்கவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது. | இவ்வளாகத்தில் இக்கம்பனி நிறுவப்படுவதற்கு முன்னர், அதிகாரசபையின் கால்நடை அபிவிருத்தி திணைக்களம் இந்த வளாகத்தில் நிறுவப்பட்டதுடன், 1998 ஆம் ஆண்டில் இந்த கம்பனி பதிவு செய்யப்பட்டதுடன் அதில் காணப்பட்ட அலுவலக உபகரணங்கள் போன்றவை புதிதாக நிறுவப்பட்ட வ/ப மகாவலி கால்நடை வள மற்றும் விவசாய வணிக (தனியார்) நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டு அந்த அதிகாரசபை அக்கம்பனிக்கு செய்யப்பட்ட முதலீடொன்றாக கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது. எனவே, அதிகாரசபையின் சொத்துப் பதிவேட்டில் தெமட்டகொட பிரதேசத்தில் உள்ள கட்டிடங்கள் மற்றும் காணிகளின் பெறுமதி மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளன.<br><br>2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான நிலையான சொத்துக்கள் உட்பட பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் 2023 மே 23 அன்று கணக்காய்விற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. | குறிப்பிட்ட சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். குறிப்பிட்ட சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.<br><br>அழிக்கப்பட்ட மற்றும் தொலைந்துபோன த சொத்துக்கள் தொடர்பாக, நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு, பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளைக் கண்டறிவதற்கு மற்றும் ஏதேனும் நட்டமொன்று ஏற்பட்டிருப்பின் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அதிகாரசபைக்கு சொந்தமான இரண்டு துணை கம்பனிகளான மகாவலி வென்ச்சர் கெப்பிடல் (தனியார்) கம்பனி 2012 ஆம் ஆண்டிலும், இயற்கை வளங்கள் முகாமைத்துவ (தனியார்) கம்பனி 2019 ஆம் ஆண்டிலும் கலைப்பதற்கு முடிவு செய்யப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரை கலைப்பு நடவடிக்கைகள் முடிக்கப்படவில்லை. | இவ்விரு கம்பனிகளையும் அமைச்சரவையின் தீர்மானங்களுக்கு அமைய கலைப்பதற்காக கலைப்பாளர நியமிக்கப்பட்டுள்ளதுடன், இதுவரை இரண்டு தடவைகள் கலைப்பாளர் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. இது தவிர, சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் தொடர்பான தகவல்களும் சேகரிக்கப்பட்டுள்ளன. முறைப்படி, அரச வர்த்தமானி மற்றும் இரண்டு தேசிய பத்திரிகைகளில் அறிவிப்புகள் வெளியிடப்பட்டு, கடன் கொடுத்தோரின் கூட்டமும் நடாத்தப்பட்டது. அதன்படி, இரு கம்பனிகளையும் கலைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. | கம்பனிகளைக் கலைப்பதற்கான பணிகள் விரைவில் முடிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | அதிகாரசபைக்கு சொந்தமான 43 களஞ்சியசாலைகள் 2009 ஆம் ஆண்டு முதல் நெல் சந்தைப்படுத்தல் சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும், அந்த களஞ்சியசாலைகளுக்கு எவ்வித வாடகைப் பணமொன்றும் மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்படவில்லை. களஞ்சியசாலைகளின் உரிமையை நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு மாற்றுமாறு நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவரால் கோரப்பட்ட போதிலும், கணக்காய்வுத் திகதியான 2023 மே 18 இல் கட்டிடங்களின் மதிப்பீட்டுப் பெறுமதி மதிப்பீட்டு திணைக்களத்திடம் இருந்து பெறப்பட்டு வாடகை வசூலிக்கப்படுவதற்கு அல்லது கையளிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | குறித்த களஞ்சியசாலைகளுக்கான வாடகையை செலுத்துவதற்கு நெல் சந்தைப்படுத்தல் சபையினால் முடியாது என தலைவர் எழுத்து மூலம் தெரிவித்திருந்த நிலையில், களஞ்சியசாலைகளை வாடகை செலுத்துவதிலிருந்து விடுவித்து நெல் சந்தைப்படுத்தல் சபையிடம் ஒப்படைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்று சமர்ப்பிக்குமாறு தலைவர் , நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு அறிவித்துள்ளார். அதன் முன்னேற்றத்திற்கு ஏற்ப மேற்கொண்ட நடவடிக்கை எடுக்கப்படும். | இக் களஞ்சியசாலைகளுக் கான நிலுவை வாடகை வசூலிக்கப்படுவதற்கு அல்லது வாடகை செலுத்துவதிலிருந்து முறையாக விடுவிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | (i) சிறிய அளவிலான நீர்மின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள 12 முதலீட்டாளர்களிடமிருந்து (நீர்மின் நிலையங்களின் உரிமையாளர்கள்) அதிகாரசபையால் அறவிடப்படுகின்ற நீர் பிடிப்புப் பகுதி முகாமைத்துவக் கட்டணத்தை வசூலிப்பதற்காக, இலங்கை மின்சார சபை, | 2021 ஆம் ஆண்டில் சிறிய அளவிலான நீர்மின் செயற்திட்ட முதலீட்டாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகள் கருத்திற் கொள்ளப்பட்டு முன்னாள் ஜனாதிபதியின் செயலாளரினால் ”நீர் பிடிப்புப் பகுதி முகாமைத்துவக் | அந்தந்த நீர்மின் நிலைய உரிமையாளர்களுடன் முறையான முத்தரப்பு ஒப்பந்தம் செய்து கொளவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டு நீர் முகாமைத்துவக் கட்டண நிலுவையை வசூலிப்பதற்கு |

நீர்மின் நிலைய உரிமையாளர் மற்றும் மகாவலி அதிகாரசபை உட்பட முறையான முத்தரப்பு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக மின்னுற்பத்தியில் ஈடுபட்டுள்ள 12 சிறிய அளவிலான மின்னுற்பத்தி நியைங்களிடமிருந்து 2021 ஆம் ஆண்டிற்காக ரூபா 72,534,483 உம், 2022 ஆம் ஆண்டிற்காக ரூபா 169,615,000 உம், உட்பட கூட்டுத்தொகை ரூபா 242,149,483 ஆன தொகை 2022 திசெம்பர் 31 வரை வசூலிக்கப்படுவதற்கு முடியாதிருந்தது.

கட்டணம்" வசூலிப்பதை நிறுத்தி வைக்குமாறு வழங்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் 2021 நவம்பர் முதல் 2022 யூன் வரை அக்கட்டணம் பெறப்படவில்லை.

எவ்வாறாயினும், 2022 யூன் மாதத்தில் குறிப்பிட்ட நீர் பிடிப்பு பகுதி முகாமைத்துவக் கட்டணம் மீண்டும் வசூலிக்கப்பட முடியுமென ஜனாதிபதியின் செயலாளரினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. இதன்படி, 2022 யூன் மாதம் முதல் நீர்ப்பிடிப்புப் பகுதி முகாமைத்துவக் கட்டணம் பெறப்பட வேண்டியுள்ள போதிலும், அப்போது இலங்கை மின்சார சபை எதிர்கொண்ட நிதி நெருக்கடி காரணமாக, சிறிய அளவிலான நீர்மின் நிலையங்களில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட மின்சாரத்திற்கான கொடுப்பனவுகள் செலுத்தப்படாததுடன் இதன்படி, இலங்கை மகாவலி அதிகார சபைக்கு பெறப்பட வேண்டிய நீர் பிடிப்புப் பகுதி முகாமைத்துவக் கட்டணம் பெறப்படவில்லை. ஆனால் தற்போது நிதி நெருக்கடி படிப்படியாக இயல்பு நிலைக்கு வருவதால், இலங்கை மின்சார சபையால் இலங்கை மகாவலி அதிகாரசபைக்கு குறிப்பிட்ட நீர் பிடிப்புப் பகுதி முகாமைத்துவக் கட்டணம் 2023 யூலை மாதம் முதல் பெற்றுக் கொள்ளப்படுகின்றது.

இருப்பினும் நீர் பிடிப்புப் பகுதி முகாமைத்துவக் கட்டணக் கொடுப்பனவு நிறுத்தப்பட்ட 2021 நவம்பர் முதல் 2022 யூன் மாதம் வரையான காலப்பகுதிக்காக , நீர் பிடிப்புப் பகுதி முகாமைத்துவக் கட்டணம் அறவிடப்படுவதற்கான வாய்ப்பொன்று

நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | | இருக்கவில்லை. | |
| | (ii) இந்த மின்னுற்பத்தி நிலையங்கள் தவிர மகாவலி விசேட அதிகாரப் பிரிவில் மின்சார உற்பத்தியில் ஈடுபட்டுள்ள 65 சிறிய நீர்மின் நிலையங்கள் காணப்பட்டதுடன், அவை அதிகாரசபையால் ஒழுங்குபடுத்தப்படுவதற்கும் மற்றும் நீர் பிடிப்பு பகுதிகளின் முகாமைத்துவக் கட்டணத்தை வசூலிப்பதற்கு முறையான உடன்படிக்கைகளில் ஈடுபடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த 65 சிறிய அளவிலான நீர்மின் நிலையங்கள் 15-25 வருடங்களுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்டதுடன் அவை நிர்மாணிக்கப்பட்டபோது இலங்கை மகாவலி அதிகார சபையின் தலையீடு இன்றி பிரதேச செயலாளர்களினால் அதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது இந்த சிறிய அளவிலான நீர்மின் நிலையங்களால் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்திற்காக இலங்கை மின்சார சபையால் அவற்றின் பராமரிப்பு செலவுகளுக்கு போதுமான அளவில் தயாரிக்கப்பட்ட கொடுப்பனவு முறைமையின் (Tariff) பிரகாரம் பணம் செலுத்தப்படுகின்றது. எனவே, அதிகாரசபை நீர் பிடிப்பு பகுதி முகாமைத்துவக் கட்டணத்தை வசூலித்தால், அந்த மின் உற்பத்தி நிலையங்களுக்கான கொடுப்பனவு முறைகளை அதற்கு இணங்க திருத்தம் செய்ய வேண்டும். எனவே, இந்த 65 சிறிய அளவிலான நீர்மின் நிலையங்களிலிருந்து நீர்ப்பிடிப்புப் பகுதி முகாமைத்துவக் கட்டணமொன்று வசூலிப்பதற்காக ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கான வாய்ப்பு தற்போது இல்லை. | சம்பந்தப்பட்ட நீர்மின் நிலையங்களை முறைப்படுத்துவதற்கு மற்றும், நீர் பிடிப்புப் பகுதி முகாமைத்துவக் கட்டணத்தை வசூலிப்பதற்கும் பொருத்தமான முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |
| (ஊ) | வளவ பிரதேசத்தில் கருங்கல் அகழ்வுகளை மேற்கொண்ட 16 வர்த்தகர்களிடமிருந்து 2009-2020 காலப்பகுதியில் அறவிடப்பட வேண்டிய காணி பயன்பாட்டிற்கான கட்டணம் ரூபா 1,038,026,047 ஆக இருந்ததுடன் இதில் பல்வேறு சந்தர்ப்பங்களில் ரூபா 144,756,661 அதாவது 13.94 சதவீதம் மட்டுமே அறவிடப்பட்டிருந்தது. அதன்படி அறவிடப்படாத நிலுவை காணி பயன்பாட்டிற்கான கட்டணம் ரூபா 893,269,386 ஆகும். அதிகாரசபையால் கருங்கல் | 2020 திசெம்பர் 20 ஆம் திகதிய அமப/20/1852/317/012 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் 15 வர்த்தகர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய காணி பயன்பாட்டுக் கட்டணமாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன் 15 வர்த்தகர்களில் ஆர். எல் பசில் ரோஹன, சைனா ஸ்டேட் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பனி, சீ.கே. திஸாநாயக்க ஆகியோரால் சகல நிலுவைத் | காணி பயன்பாட்டுக் கட்டணங்கள் தொடர்பான நிலுவைத் தொகைகள் செலுத்தி முடிக்கப்படும் வரை புதிய அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படக்கூடாது. காணி பயன்பாட்டுக் கட்டணங்கள் செலுத்தாத சுரங்கத் தொழிலாளர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அகழ்விற்கான வருடாந்த காணி பயன்பாட்டிற்கான அனுமதிப்பத்திரம் வழங்கலின் போது கடந்த வருட நிலுவையைக் கணக்கிட்டுஅது அறவிடப்பட்டதன் பின்னர் புதிய அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்படுவதற்கு முறையான முறைமையொன்று பின்பற்றப்படாமை மற்றும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளிடமிருந்து குறிப்பிட்ட நிலுவை வரி நாளதுவரையாக்கப்பட்டு அறவிடப்படுதல் அலட்சியப்படுததப்பட்டமை காரணமாக இந்நிலுவை தவறவிடப்பட்டிருந்தது. எனினும் 2020 திசெம்பர் 20 ஆம் திகதிய අමප/20/1852/317/012 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் 16 வர்த்தகர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 893,269,386 ஆன காணி பயன்பாட்டுக் கட்டணத்தில் 75 சதவீதம் அதாவது ரூபா 669,952,040 பதிவளிக்கப்படுவதற்கும் மீதமுள்ள தொகையான ரூபா 223,317,346 ஆனது 36 தவணைகளில் அறவிடப்படப்படுவதற்கும் அங்கீகரிக்கப்படடிருந்தது. மேலும் அந்த வர்த்தகர்களில், 05 வர்த்தகர்கள் ஒப்புக்கொண்டபடி இத்தவணைக் கொடுப்பனவு தொகையில் ரூபா 157,004,041 ஆன கொடுப்பனவை செலுத்துவதற்கு தவறியிருந்தனர்.தவற விடப்பட்ட நிலுவைக்கட்டணம் சதவீதமாக காட்டப்படும்போது அது செலுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்ட காணி பயன்பாட்டுக் கட்டணங்களின் நிலுவைத் தொகையில் 70 சதவீதமான மதிப்பொன்றாகும். | தொகையும் செலுத்தி முடிக்கப்பட்டுள்ளது.இலங்கை இராணுவம் மற்றும் கே.ஜி.ரத்னகுமார ஆகியோரால் வழமையான மாதாந்த தவணைகள் செலுத்தப்பட்டு வருகின்ற நிலையில் மீதமுள்ளவர்களிடம் இருந்து இந்தப் பணத்தை அறவிடுவதற்கு பொதுச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் அந்தந்தத் செயற்திட்டங்கள் செயல்படுத்தப்படும் பொலிஸ் அதிகாரப் பிரிவுகளில் முறைப்பாடுகள் அளிக்கப்பட்டிருந்ததுடன் மாகா பொறியியலாளர்களுக்கு கொழும்பில் இருந்து முறைப்பாட்டு கோப்புகளை சேகரிப்பதற்கு ஏற்பாடு செய்யுமாறு சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையங்களால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | |
| (எ) | 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க இலங்கை மகாவலி அதிகாரசபைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின்படி, காணிப் பாவனைக்கான அடிப்படை கட்டமைப்புத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், 2011 ஆம் ஆண்டிற்குப் பின்னர், தற்போதைய காணி பயன்பாட்டுத் தேவைகளுக்கு ஏற்ப அந்த கட்டமைப்புத் திட்டங்கள் நாளதுவரையாக்கப்படவில்லை. | தேசிய மற்றும் தற்போதைய தேவைகளின் அடிப்படையில் மகாவலி பிரதேசங்களில் காணப்படும் மட்டுப்படுத்தப்பட்ட காணியின் அடிப்படையில், விவசாய, கைத்தொழில் மற்றும் பல்வேறு திட்டங்களுக்கு அரசாங்க காணிகள் முறையான முறையின் மூலம் வழங்கப்படுகின்றன. இது தேசிய தேவைகளை | தற்போதைய காணி பயன்பாட்டுத் தேவைகளுக்கு ஏற்ப கட்டமைப்புத் திட்டங்கள் நாளதுவரையாக்கப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| | இலக்காக கொண்டு பொருளாதாரத்தை வலுப்படுத்துவது, அந்நிய செலாவணியை உருவாக்குதல், வேலை வாய்ப்புகளை விரிவுபடுத்துதல் மற்றும் வேலையின்மையை நீக்குதல், வறுமையை ஒழித்தல் மற்றும் பிராந்திய உட்கட்டமைப்பை மேம்படுத்துதல் போன்றவற்றை நேரடியாகவும் மறைமுகமாகவும் நோக்கமாகக் கொண்டுள்ளது. காணிகளுக்கான முதலீட்டாளர்களைத் தேர்ந்தெடுப்பதில், காணி பயன்பாட்டுத் திட்டத்தின்படி, பௌதீக திட்டமிடல் பரிந்துரையின் கீழ், அரசாங்க காணி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு முதலீட்டாளர்களுக்கு காணிகள் வழங்கப்பட்டுள்ளன. | |

**3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) i | உதவிப் பணிப்பாளரின் (காணிகள்) 2015 ஆகஸ்ட் 24 ஆம் திகதிய DL/01/01 ஆம் இலக்க மகாவலி அதிகார வரம்பிற்குட்பட்ட காணிகளிலிருந்து அகற்றப்பட்ட கனிமப் பொருட்களுக்கு கட்டணம் வசூலிப்பது தொடர்பான கடிதத்தின் பிரகாரம் அனுமதிப்பத்திரத்தில் நில பயன்பாட்டுக் கட்டணம் தொகைக்கு ஏற்ப வசூலிக்கப்படும். அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கனிமங்களின் அளவின் பிரகாரம் நில பயன்பாட்டுக் கட்டணம் அறவிடப்படவேண்டியுள்ள போதிலும் அதிகாரசபையின் சீ வலயத்தில் 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் ஒரு மாத அகழ்வாராய்ச்சிக்கான காணி பயன்பாட்டுக் கட்டணம் மட்டுமே அறவிடப்பட்டு மணல் அகழ்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இதன்காரணமாக, 386 மணல் | மகாவலி சீ வலயத்தில் 2016,2017,2018 ஆம் ஆண்டுகளில் மாதத்திற்கான காணி பயன்பாட்டுக் கட்டணம் மட்டும் அறவிடப்பட்டு மணல் அகழ்விற்கான 386 மணல் அகழ்வு அனுமதிப்பத்திரங்களுக்கான எஞ்சிய காலப்பகுதிகளுக்கு அறவிடப்பட வேண்டிய காணி பயன்பாட்டுக் கட்டணம் ரூபா 278,685,665 வருமானமொன்று அரசாங்கத்திற்கு இழக்கப்பட்டமை தொடர்பில் பொறுப்பான அதிகாரிகளை அடையாளம் காண்பதற்கு நீர்ப்பாசன அமைச்சு. சிரேஷ்ட உதவிச் செயலாளரின் தலைமையிலான குழுவொன்றின் மூலம் விசாரணை நடத்தப்பட்டு, விசாரணையின் பரிந்துரைகள் தற்போது | சுற்றறிக்கைகளுக்கு முரணாகச் செயற்பட்டு அதிகார சபைக்கு அறவிடப்பட வேண்டிய வருமானம் இழக்கப்படுவதற்கு பொறப்பான தரப்பினரிடமிருந்து இந்தப் பணத்தை அறவிடுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அகழ்வு அனுமதிப்பத்திரங்களுக்கான எஞ்சிய காலப்பகுதிக்காக அறவிடப்படவேண்டியுள்ள நில பயன்பாட்டுக் கட்டணமான ரூபா 278,685,665 அறவிடுவதற்கு முடியாதிருந்தது. எனினும் அதிகாரசபைக்கு ரூபா 278,685,665 வருமானமொன்று தவற விடப்பட்டமை தொடர்பில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் யார் என்பது மற்றும் மணல் அகழ்வு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும்போது பொறுப்பற்ற முறையில் செயற்பட்ட மற்றும் பின்னர் அது தொடர்பாக முறையான மேற்பார்வையொன்று மேற்கொள்ளப்படாது அதிகாரிகள் யார் என்பது பற்றிய விசாரணை நடாத்தப்பட்டு பொறுப்பான அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு அதிகாரசபையால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அமுல்படுத்தப்பட்டுள்ளன. | |
| ii | இவ்வாறான சிக்கல்கள் எழுவதைத் தடுப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் கீழ், 2019 பெப்ரவரி 21 ஆம் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழுக் கூட்டத்தில் மகாவலி ஆற்றின் இருபுறமும் 60 மீற்றர் இருப்பு எல்லைகளைக் குறிப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக 2018 ஆம் ஆண்டில் ரூபா 1,000,000 மற்றும் 2019 ஆம் ஆண்டில் ரூபா 612,300 உம் ஆக மொத்தம் ரூபா 1,612,300 தொகையொன்று இலங்கை நில அளவைத் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்ட போதிலும், கணக்காய்வு திகதியான 2023 யூன் 19 வரை அளவீட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு ஒதுக்கப்பட்ட எல்லைகள் குறிக்கப்படவில்லை. | மகாவலி சீ வலயத்தில் 2016,2017,2018. ஆம் ஆண்டுகளில் மாதத்திற்கான காணி பயன்பாட்டுக் கட்டணம் மட்டும் அறவிடப்பட்டு மணல் அகழ்விற்கான 386 மணல் அகழ்வு அனுமதிப்பத்திரங்களுக்கான எஞ்சிய காலப்பகுதிகளுக்கு அறவிடப்பட வேண்டிய காணி பயன்பாட்டுக் கட்டணம் ரூபா 278,685,665 வருமானமொன்று அரசாங்கத்திற்கு இழக்கப்பட்டமை தொடர்பில் பொறுப்பான அதிகாரிகளை அடையாளம் காண்பதற்கு நீர்ப்பாசன அமைச்சு. சிரேஷ்ட உதவிச் செயலாளரின் தலைமையிலான குழுவொன்றின் மூலம் விசாரணை நடத்தப்பட்டு, விசாரணையின் பரிந்துரைகள் தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ளன. | முகாமைத்துவத்தின் கருத்துரை அவதானிப்புடன் பொருந்தவில்லை. பொது முயற்சிகள் குழுவின் உத்தரவுப்படி, நில அளவைத் திணைக்களத்தின் உதவியுடன் ஒதுக்கப்பட்ட எல்லைகள் குறிக்கும் பணியை விரைவாக முடிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை காணி முகாமைத்துவத்திற்கு அறிமுகம் செய்வதற்காக அதிகாரசபையால் 2016 மற்றும் 2018 ஆம் | காணி முகாமைத்துவத்தை திறமையாக மாற்றும் நோக்கத்துடன் காணி முகாமைத்துவ (E-Slims) தரவு அமைப்பு 2016 ஆம் | காணி முகாமைத்துவத் தகவல் அமைப்பை முறையாக செயற்படுத்துவதற்கு |

| | | |
|---|---|---|
| | ஆண்டுகளில் ரூபா 6,973,405 செலவிடப்பட்டு காணித் தகவல் அமைப்பொன்று நிறுவப்பட்டிருந்த போதிலும் , இந்த அமைப்பை செயல்படுத்த 60 அதிகாரிகளுக்கு பயிற்சி அளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இருப்பினும் கணக்காய்வுத் திகதியான 2023 ஆகஸ்ட் 09 வரை இத்தகவல் அமைப்பு முறையாகச் செயற்படாததால், அச்செலவுகள் விளைவற்ற செலவொன்றாக காணப்பட்டது. | ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்படி, 2019 ஆம் ஆண்டிற்குள் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட காணித் துண்டுகள் பற்றிய தகவல்கள் அதில் இடம் பெற்றுள்ளன. ஆனால் இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக பயிற்சி பெற்ற 60 அதிகாரிகள் பதவி உயர்வு பெற்றமை மற்றும் சேவையிலிருந்து விலகியமை காரணமாக நிகழ்ச்சித்திட்டத்திற்காக பயன்படுத்தப்படுவதற்கு முடியாதிருந்தமை, கொரோனா தொற்றுநோய், 2019 இல் காணி உறுதிப்பத்திரங்கள் வழங்குதலை விரைவு படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு அனைத்து அதிகாரிகளும் ஈடுபடுத்தப்பட்டமை மற்றும் அரசாங்க தரவு இடம் LGC1 இலிருந்து LGC2 இற்கு மாற்றப்பட்டமை போன்ற காரணங்களால் , குறிப்பிட்ட தரவு அமைப்பு செயற்படாததால் தரவு உள்ளீடு நிறுத்தப்பட்டுள்ளது. 2023 மே 23 மற்றும் 2023 ஆகஸ்ட் 10 ஆம் திகதிகளில் நடைபெற்ற முயற்சிகள் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணினி வல்லுநர்களின் உதவியுடன் 2023 ஆம் ஆண்டில் இந்த அமைப்பின் நாளதுவரையாக்கப்படல் தொடங்கப்பட்டதுடன், 2024 ஏப்ரல் மாதம் வரை காணித் தரவுகள் உள்ளடக்கப்பட்டு முடிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | தேவையான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, அதிகாரசபைக்கு சொந்தமான பீ,சீ,டீ,ஜீ,எச்,எல்,ஈ,ஹுருலுவேவ, வளவ ஆகிய வலயங்களில் மற்றும் நீர்த்தேக்கம் மற்றும் செயற்பாட்டுப் பிரிவின் கீழ் உள்ள | | |

நீர்த்தேக்க இருப்புக்களில் 2023 யூலை 03 ஆம் திகதி வரை அங்கீகரிக்கப்படாத காணிகளின் எண்ணிக்கை 2544 மற்றும் நபர்களின் எண்ணிக்கை 402 ஆகவும் இருந்தன.

(i) இதில் அனுமதிக்கப்படாத குடியிருப்பாளர்களை அகற்றுவதற்காக 910 வலய மட்ட பகுதிகளுக்கு நிறுவன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததுடன் , 145 பகுதிகளுக்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது. பணிப்பாளர் (நீர்த்தேக்கங்கள் மற்றும் செயல்பாடுகள்) கீழ் காணப்படும் நீர்த்தேக்க இருப்புக்களில் 150 குடியிருப்பாளர்களுக்கு நிறுவன நடவடிக்கைகளும், 185 பேருக்கு சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருந்தன. இதன் பிரகாரம் எஞ்சிய 1489 பகுதிகளில் 67 குடியிருப்பாளர்களை அகற்றுவதற்காக கணக்காய்வுத் திகதியான 2023 ஆகஸ்ட் 09 வரை எவ்வத நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

தொடர்ந்தும் காணிகளில் உள்ள ஆக்கிரமிப்பாளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக, நில அளவைத் திணைக்களத்துடன் இணைந்து நிலங்களை அளவீடு செய்வதற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி 1489 அனுமதியற்ற நடவடிக்கைகளில் 547 குடியிருப்பாளர்கள் மாத்திரம் பெரும்போகத்தில் நெல் பயிர்ச்செய்கை பணிகள் அதிக பருவத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் பிராந்திய அளவில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு அனுமதியின்றி காணிகளுக்குள் நுழைவது தடுக்கப்பட்டது. நிரந்தர பயிர்களை பயிரிடுகின்ற அனுமதிக்கப்படாத குடியிருப்பாளர்கள் 651 ஆக இருந்ததுடன் அவர்களுக்கு எதிராக நிறுவன நடவடிக்கைகள் மற்றும் சட்ட நடவடிக்கைகள் எடுத்தல் தொடங்கப்பட்டுள்ளது. மேலும், அனுமதியின்றி காணிகளை அனுபவித்து வந்த 17 நபர்களை மட்டும் நீககுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிரந்தர வீடுகளை கட்டிக் கொண்ட மக்கள் வசிக்கும் காணிகளை இனங்கண்டு அளவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

பணிப்பாளர் (நீர்த்தேக்கங்கள் மற்றும் செயல்பாடுகள்) கீழ் காணப்படும் நீர்த்தேக்க இருப்புக்களில் அகற்றுவதற்காக எல்லைகள் அடையாளம் காணப்பட வேண்டியதுடன் அவற்றை அளவிடுவதற்கு தேவையான

நீர்த்தேக்க இருப்பு மற்றும் பிராந்தியங்களில் சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை விரைவில் அதிகாரசபைக்கு பெற்றுக்கொள்வதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், அத்துமீறி நுழைந்த 67 பேரில் 57 பேருக்கு காணியை விடுவிக்குமாறு கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் அந்த அத்துமீறல்களை அகற்றுவதற்கு நிறுவன ரீதியிலான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | |
| (ii) | இவ்வாறு நீர்த்தேக்க இருப்புக்களில் வணிக அடிப்படையில் காணிகளை சுவீகரித்தல் மற்றும் கட்டிட நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், சீ வலயத்தின் உல்ஹிட்டிய பிட்டவன அருகிலுள்ள நீர்த்தேக்க இருப்பு பகுதியில் கிறிஸ்போ நிறுவனத்தால் கட்டப்பட்ட கட்டிடத்துடன் கூடிய காணி மற்றும் காணியை ஒட்டியுள்ள வீடொன்றுடனான காணியும் அதிகாரசபையின் ரத்கிந்தா சுற்றுலா விடுதிக்கு அருகில் தனியார் சுற்றுலா விடுதியொன்றாக அனுமதியின்றி இயங்கி வருகின்ற ஹோட்டல் கட்டிடம் மற்றும் காணி கணக்காய்வின் மூலம் அவதானிக்கப்பட்டிருந்தது. | மகாவலி சீ பிராந்தியத்தில் ஹிரான்துரு கோட்டே பிரதேசத்திலன் கோல்டன் கிறெயின்ஸ் (தனியார்) கம்பனிக்கு (கிறிஸ்போ) விவசாய முதலீட்டு செயற்திட்டத்திற்காக நீண்ட கால குத்தகை அடிப்படையில் காணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் அக்கம்பனியால் உத்தியோகபூர்வ இல்லத்தை நிர்மாணிப்பதற்காக உல்ஹிட்டிய நீர்த்தேக்கத்தின் கீழ் உல்ஹிட்டிய ஓயாவிற்கு அருகில் ½ ஏக்கர் காணிக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கு பௌதீக திட்டக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டதன் பின்னர் முறையான அங்கீகாரம் வழங்கப்படுவதற்காக அனுப்பப்பட்டுள்ளது.<br><br>2003/2004 மகாவலி ஊழியர்களின் காணி கச்சேரிகளின் மூலம் தனியாருக்குத் தெரிவு செய்யப்பட்ட காணிகள் மகாவலி சீ வலயத்தின் உல்ஹிட்டிய பிரதேசத்தில் இருந்து ஒதுக்கப்பட்டிருந்ததுடன் , அந்த காணிகளுக்காக එල්/10/02/ඕ/ගිරා/රතු/නිදි/නිවා/02 ஆம் இலக்க விடுவிப்பு கொடுப்பனவு பத்திரமொன்று தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 01 ஆம் இலக்க வீட்டுமனையை சுற்றுலா விடுதியொன்றாக பராமரிப்பதற்காக குறித்த | சுற்றறிக்கையின் பிரகாரம் அதிகாரசபைக்கு சொந்தமான முக்கிய பகுதிகளை பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | | கட்டிடம் ஒப்படைக்கப்பட்டு வரிப்பணம் அறவிடப்படுவதற்கான ஒப்பந்தமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (ஈ) | அதிகார சபைக்குச் சொந்தமான 11 நாற்று மேடைகளில் 06 இல் இருந்தும், 21 பண்ணைகளில் 13 இல் இருந்தும் மீளாய்வாண்டில் நட்டம் பெறப்பட்டிருந்ததுடன் அந்த நட்டம் முறையே ரூபா 27,429,000 மற்றும் ரூபா 72,452,000 ஆக இருந்தது. | நாற்றுக்களை உற்பத்தி செய்யும் செலவினங்கள் அதிகரித்தமையால் நாற்றொன்றின் தற்போதைய சந்தை விலையின் பிரகாரம் அதிகார சபையின் நாற்று மேடைகளுக்கு தேவையான நாற்று வகைகள் வழங்க முடியாதிருந்தமை மற்றும் நாற்றுக்கள் பண்ணைகளில் சலுகை விலையில் வழங்கியமை, 2021 ஆம் ஆண்டில் நாட்டில் காணப்பட்ட நெருக்கடியான நிலைமையின் அடிப்படையில் நாற்றுக்களை நட்டுதல் மற்றும் கொள்வனவு செய்தல் குறைவடைந்தமையும் இதற்கு தாக்கமளித்திருந்தது. 2022 ஆம் ஆண்டின் போது 17 பண்ணைகளில் 07 பண்ணைகள் இலாபகரமான வருமானம் உழைக்கும் அலகாக அபிவிருத்தி செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 146.64 மில்லியன் நேர் செலவினங்களில் உழைக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 193.57 மில்லியன் ஆகும். கணிப்பீட்டின் போது ரூபா 24.26 மில்லியன் நட்டம் காணப்பட்டிருந்த போதும் அதன் மூலம் வலய ரீதியில் விவசாய சமூகத்திற்கு வழங்கப்படுகின்ற சேவைகள், தொழில்நுட்ப மற்றும் விஞ்ஞான ரீதியான அறிவுகளை வழங்குதல் தொடர்பாக கவனத்திற்கொள்ளும் போது இலாபமற்ற பண்ணைகளும் ஆக்கபூர்வமான பண்ணைகளாக கருத முடியும். | கிரயங்களைக் குறைக்கும் வகையில் கருத்திட்டங்கள் மற்றும் வருமானத்தைக் கட்டியெழுப்பும் செயல் நடவடிக்கைத் திட்டத்தைப் பின்பற்றி இலாபத் தன்மையை கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகார சபையால் முதலீட்டு செயற்திட்டத்திற்காக 704 | முதலீட்டு காணிகளை அகற்றும் போது அந்த காணிகள் | முழுமையாக அபிவிருத்தி செய்யப்படாது |

| | | | |
|---|---|---|---|
| | முதலீட்டாளர்களுக்கு 7832 ஹெக்டேயர் காணி அளவு வழக்கப்பட்டிருந்தது. அதில் முழுமையாக 3645 ஹெக்டேயர் காணி அளவில் அபிவிருத்தி மாத்திரமே அபிவிருத்தி செய்யப்பட்டிருந்ததுடன் முழுமையாக அபிவிருத்தி செய்யப்படாத காணிகள் 2697 ஹெக்டேயராகக் காணப்பட்டது. அபிவிருத்தி செய்யப்படுகின்ற காணிக் கூறுகளின் அளவு 5 சதவீதத்திற்கும் 25 சதவீதத்திற்கும் இடையிலாக இருந்ததுடன் அபிவிருத்தி செய்யப்பட்ட காணி 377 ஹெக்டேயரும், 25 சதவீதத்திற்கும் 50 சதவீதத்திற்கும் இடையிலான அபிவிருத்தி செய்யப்பட்ட காணி 291 ஹெக்டேயரும் காணப்பட்டது. அதன் பிரகாரம் வழங்கப்பட்ட காணி அளவில் 34 சதவீதம் முழுமையாக அபிவிருத்தி செய்யப்படாதிருந்த மையும் 09 சதவீதம் குறைவான மற்றம் அபிவிருத்தி செய்யப்படுவதாகக் காணப்பட்டது. இந்தக் காணிகள் பொருளாதார மற்றும் சமூக ரீதியான நலன்களைப் பெறும் வகையில் முதலீட்டுப் பணிகளில் ஈடுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இனங்காணப்பட்டதன் பின்னர் இனங்காணப்பட்ட முதலீட்டுக் காணிகளுக்காக பத்திரிகை அறிவித்தல் மூலம் விருப்பத்தைக் கோருவதற்கோ அல்லது அரசாங்கத்தின் காணிக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாட்டின் அடிப்படையில் முன்னுரிமை அடிப்படையின் கீழ் முதலீட்டாளர்களைத் தெரிவு செய்யும் திட்ட முறைமை பின்பற்றப்பட்டிருந்தது. காணி மற்றும் காணிப் பயனபாட்டு திட்டத்தின் பிரகாரம் பௌதீக திட்டமிடல் பரிந்துரையின் கீழ் முறையான திட்ட முறைமை பின்பற்றி அரசாங்கத்தின் காணி கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் கௌரவ விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரத்தின் கீழ் முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | காணப்படுகின்ற செயற்திட்டங்களை இரத்துச் செய்து அதற்காக அகற்றப்பட்டுள்ள காணிகளை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கும் மிகுதி செயற்திட்டங்கள், செயற்திட்ட முன்மொழிவுகளுக்கு இணங்க அமுல்படுத்தப்படுகின்றதா? என்பது தொடர்பாக காலரீதியில் மேற்பார்வை செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | உள்நாட்டு உணவு உற்பத்தியைக் கட்டியெழுப்புதல் மற்றும் வெளிநாட்டு நிதி வசதிகளின் கீழ் முதலீட்டு சந்தர்ப்பங்களுக்காக காணிகளை வழங்குவதன் கீழ் 04 முதலீட்டாளர் களுக்கு கம்பெக்கென் ஓய வலயத்திற்கு கொல்லேபெத்த பிரதேசத்தில் 1750 ஏக்கர் வழங்கப்பட்டிருந்தது. அதில் RAN பிளாட்டேசன் நிறுவனத்திற்கு சோள பயிர்ச் செய்கைக்காக வழங்கப்பட்டிருந்த 500 ஏக்கர் அந்த நிறுவனத்தால் கைவிடப்பட்டிருந்ததுடன் மொறொகட எக்ரோ சேவிஸிற்கு ஆரம்பமாக விடுவிக்கப்பட்ட 250 ஏக்கருக்காக 2023 மார்ச் 28 வரையில் வாடகை அங்கீகாரத்தை வழங்கியெனும் வாடகை அறவிடப்படா திருந்ததுடன் இணங்கப்பட்ட பிரகாரம் ரூபா 1,125,000 ஆக செயலாற்றல் பிணை முறியைப் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை | RAN பிளான்டேசன் நிறுவனத்திற்கு சோளப் பயிர்ச் செய்கைக்காக அருகிலுள்ள காணியில் அரசாங்கத்தின் மதிப்பீட்டின் அடிப்படையில் காணி கையளிக்கப்பட்டுள்ளது. அந்த முதலீட்டாளருக்கு காணி எல்லையைக் காண்பிக்கின்ற சந்தர்ப்பத்தின் போது பிரச்சினையான நிலைமை ஏற்பட்டமையினால் பயிர்ச் செய்யக்கூடிய அளவிற்கு மாத்திரம் பின்னர் செயலாற்றல் வாடகைத் தொகையான ரூபா 555,750 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இந்தக் காணிக்காக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டுள்ளமையால் சட்டமா அதிபர் திணைக்களத்தால் | கைவிடப்பட்டுள்ள காணிகளை மீண்டும் பெறவேண்டியிருந்ததுடன் நிலுவை வாடகையை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். பெற்றுக் கொள்ளப்படாத செயலாற்றல் பிணைமுறையை தாமதமின்றி பெற்றுக்கொள்ள வேண்டியிருந்ததுடன் அங்கீகாரத்துடன் முறையான காணி வாடகை வழங்கப்படல் வேண்டும். காணி வாடகை நோக்கம் நிறைவேற்றப்படுகின்ற |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்கப்பட்டிருக்கவில்லை. எனா பயிர்ச் செய்கைக்காக CSW பிளான்டேசன் நிறுவனத்திற்கு 100 ஏக்கர் வழங்கப்பட்டிருந்ததுடன் 2020 திசெம்பர் முதல் கணக்காய்வுத் திகதியான 2023 ஏப்ரல் 28 ஆம் திகதி வரை நிலுவை வாடகை ரூபா 1,800,000 அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திற்கு 150 ஏக்கர் காணி வழங்கப்பட்டிருந்ததுடன் முறையான பிரகாரம் அளவிடைகளை மேற்கொண்டு உடன்படிக்கை செய்யப்பட்டிருக்கவில்லை. | அறிவிக்கப்பட்ட பிரகாரம் காணியின் அபிவிருத்தி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளது. சோளப் பயிரச் செய்கைக்காக சீ.எஸ்.டபிள்யூ. ஹேபல் பிளான்டேசன் நிறுத்தின் மூலம் செயலாற்றல் வாடகை தொகையான ரூபா 450,000 செலுத்தப்பட்டுள்ளதுடன் வருடாந்த வாடகைப் பணத்தை அறவிடுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திற்கு நிபந்தனைகளை உள்ளடக்கி உரித்தினை கையளிக்கும் அறிக்கையொன்றின் மூலம் காணி விடுவிக்கப்பட்டுள்ளதுடன் இது வரை அறவிடுவதற்குள்ள வாடகைப் பணத்தை அறவிடுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | தா? என்பது தொடர்பாக தொடர்ச்சியாக பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (எ) | பீ வலயத்தில் தம்மின்ன பிரிவில் அளுத்வெவ அலகில் விவசாய ரீதியான செயற்திட்டத்தின் கீழ் தெங்கு பயிர்ச் செய்கைக்காக வரையறுக்கப்பட்ட நவ லங்கா கம்பனிக்கு நீண்டகால வாடகை அடிப்படையில் 100 ஏக்கர் வழங்கப்பட்டிருந்தது. அதன் போது இந்த 100 ஏக்கருக்கு உரிய அரசாங்கத்தின் காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் 1983 திசெம்பர் 13 ஆந் திகதி முதல் 30 வருட காலப்பகுதிக்குரிய நீண்டகால அனுமதிப் பத்திரம் மேற்கூறப்பட்ட கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் வாடகைக் காலம் 2013 திசெம்பர் 14 ஆம் திகதியில் முடிவடைந்தது. வாடகைக் காலம் முடிவடைவதற்கு முன்னர் அதனை மேலும் தொடர்தும் அந்தக் கம்பனிக்கு வழங்குவதற்கோ அல்லது ஏனைய விண்ணப்பதாரர்களுக்கு வழங்குவதற்கோ தேவையான தீர்வு மற்றும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பின்னர் காணிக்காக மதிப்பீடொன்று பெறப்பட்டு அதன் அடிப்படையில் வாடகைப் பணம் அறவிடப்படாமல் 100 ஏக்கருக்காகவும் வருடத்திற்கு | என்.கே.என்.எல். கன்ஸ்ட்ரக்ஷன் என்ட் டிவலப்மென்ட் நிறுவனத்திற்கு நீண்டகால வாடகை அடிப்படையில் இந்த காணி வழங்கப்பட்டுள்ளது. முழுமையாக அபிவிருத்தி செய்து வாடகை காலம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. புதிய வாடகைக்கு வழங்கும் போது 50 ஏக்கருக்கு மேற்பட்ட காணியாக இருந்தமையால் அமைச்சரவை அங்கீகாரம் பெற்று வாடகை அங்கீகாரம் பெறல் வேண்டும். நீண்டகால வாடகை காலம் முடிவடைந்த பின்னர் சராசரி திட்டமுறைமையின் அடிப்படையில் புதிய வாடகை அங்கீகாரம் பெற்று ஆரம்ப முதலீட்டாளருக்கு காணியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. 30 வருடங்கள் முடிவடைந்த காணிகளுக்காக மீண்டும் பிணை முறியைப் பெற்றுக்கொள்வதற்கு தற்போது தேவையான | வாடகைக் காலம் முடிவடைந்ததுடன் காணியை மதிப்பீடு செய்து புதிய வாடகை உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கும், சுற்றறிக்கையின் பிகாரம் வாடகைத் திருத்தங்களை நாளதுவரையாக மேற்கொண்டு நிலுவை வாடகை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

ரூபா 7,302 வீதம் 2013 முதல் 2017 வரையில், வருடத்திற்கு 8,764 வீதம் 2018 முதல் 2021 வரையில் கூட்டுமொத்தமாக ரூபா 80,330 தொகை உரிய கம்பனியிடமிருந்து அறவிடப்பட்டிருந்தது. எனினும் இந்தக் கம்பனிக்காக ஏனைய நிறுவனமொன்று நீண்ட காலம் வாடகை வழங்குவதாக 2013 ஆம் ஆண்டு கோரிக்கை விட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் பெறப்பட்ட அரசாங்கத்தின் மதிப்பீட்டின் படி இந்த தெங்குப் பயிர்ச் செய்கையுடன் 100 ஏக்கரில் மதிப்பீட்டுப் பெறுமதி 2013 திசெம்பர் 12 இல் உள்ளவாறு ரூபா 1,500,000 ஆக இருந்தது. கணக்காய்வுத் திகதியான 2023 ஆகஸ்ட் 09 ஆந் திகதி வரையிலும் உரிய காணிக்காக எந்தவொரு நிறுவனத்துடனும் வாடகை உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றது.

(ஏ) நீண்டகால வாடகை அடிப்படையில் வலயத்தில் காணியினை வாடகைக்கு வழங்கப்பட்டுள்ள 03 முதலீட்டு செயற்திட்டங்களுக்காக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த ரூபா 19,919,338 ஆன நிலுவை வாடகைப் பணம் கணக்காய்வுத் திகதியான 2023 ஏப்ரல் 03 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. அந்த நிறுவனங்களுக்கிடையே 02 நிறுவனங்கள் உரிய காணி வாடகையைப் பெற்ற நோக்கங்களுக்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

மூன்று வாடகையாளர்களுக்கிடையே ஒரு முதலீட்டாளரின் கணக்காய்வுத் திகதி வரையில் மொத்த வாடகை நிலுவை ரூபா 6,540,763 தொகை இனங்காணப்பட்டுள்ளதுடன் இந்த முதலீட்டாளரால் உரிய காணியை இரத்துச் செய்வதற்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டுள்ளது. சகல நிலுவை வாடகை பணத்தையும் செலுத்தியதன் பின்னர் அபிவிருத்தி செய்வதற்காக காணியை வழங்குவதற்கு வழக்கின் தீர்ப்பிற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இரண்டாவது முதலீட்டாளரான சர்வதேச பாடசாலையிலிருந்து நிலுவை வாடகைப் பணமாக ரூபா 11,854,160 தொகை காணப்பட்டதுடன் அந்த தொகையை அறவிடுவதற்காக பிடியாணை அனுப்பப்பட்ட போதும் நலுவை வாடகைப் பணம் செலுத்தப்படவில்லை.

காணி வழங்கும் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்பட்டிருந்ததா? என்பது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன் அபிவிருத்தி செய்யப்படாத காணிகளை மீண்டும் கையேற்று பொருத்தமான பணிகளுக்காக பயன்படுத்துதல் வேண்டும். நிலுவை வாடகைப் பணத்தை விரைவாகப் பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| | காணியை இரத்துச் செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. மூன்றாவது முதலீட்டாளருக்கு நிலுவைப் வாடகைப் பணமான ரூபா 2,168,618 இனை செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளதுடன வாடகைப் பணத்தை அறவிடுவதற்காக சட்ட ரீதியான நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு சித்தாசி அனுப்பப்பட்டுள்ளது. | |

**3.5 நிதியத்தின் குறைவான பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மகாவலி குடியேற்ற மக்களுக்காக கடன் வழங்கும் சுழற்சிக் கடன் திட்ட முறைமையை ஏற்படுத்துவதற்காக பொதுத் திறைசேரியிலிருந்து கிடைத்த ரூபா 50 மில்லியன் தொகை 2006 ஆம் ஆண்டில் லங்கா புத்திர அபிவிருத்தி வங்கிக்கு வழங்கப்பட்டிருந்தது. லங்கா புத்திர அபிவிருத்தி வங்கி கலைக்கப்பட்டதன் பின்னர் பிரதேச அபிவிருத்தி வங்கிக்கு உரிய வைப்பு மாற்றப்படடிருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான 2023 ஏப்ரல் 28 வரையிலும் இந்த தொகை உரிய நோக்கத்திற்காக ஈடுபடுத்தப்படாமல் வைப்பொன்றாக பேணிச்செல்லப்பட்டிருந்தது. அதற்குரிய 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைத்த வட்டி ரூபா 26.196 மில்லியனாக இருந்தமை அந்த வங்கியிலிருந்து உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. | பிரதேச அபிவிருத்தி வங்கியில் வைப்பு தொகையான ரூபா 50 மில்லியனுக்காக தற்போது வரையிலும் ரூபா 26.196 மில்லியன் வட்டி வருமானத்துடன் மொத்த கூட்டுத்தொகையான ரூபா 76.196 மில்லியன் மீதியொன்று பிரதேச அபிவிருத்தி வங்கியில் காணப்படுகின்றமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது பிரதேச அபிவிருத்தி வங்கி மேற்கூறப்பட்ட பிகாரம் கடன் முன்மொழிவு திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முதலீட்டு புரிந்துணர்வு உடன்படிக்கை வரைவொன்று மகாவலி அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் முறையான உடன்படிக்கை தயாரித்தல் சட்டப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. 2023 திசெம்பர் 31 வரையிலும் 100 தொழில் முயற்சியாளர்களுக்கு கடன் வழங்கி பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | பயன்பாடின்றி காணப்படுகின்ற பொதுத் திறைசேரியி லிருந்து கிடைத்த பணம் உரிய நோக்கங்களுக்காக ஈடுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் தாமதமின்றி எடுக்கப்படல் வேண்டும். |

## 3.6 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | (i) | 2020 யூன் 26 ஆம் திகதிய இலக்கம் 2181/25 என்ற அரசாங்கத்தின் வர்த்தமானியின் மூலம் மகாவலி ஜீ வலயத்தில் சேதன வலயமாக வர்த்மானியில் இடுவதற்கு அதிகார சபை நடவடிக்கை எடுத்திருந்ததுடன் அதற்காக ஜீ வலயத்தில் வெல்லேவல பிரதேசத்தில் ரூபா 20,278,462 செலவில் கூட்டுப்பசளை உற்பத்தி தளமொன்றும் மற்றும் அதில் 40x60 அடி அளவான 02 கட்டிடங்கள் என்பன 2021 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக மீளாய்வாண்டில் ரூபா 230,000 தொகை செலவில் கூட்டுப்பசளை புரட்டும் இயந்திரம் மற்றும் கூட்டுப்பசளை அரிக்கும் இயந்திரம் என்பன கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த இயந்திரங்கள் இதில் நிர்மாணிக்கப்பட்ட கூட்டுப் பசளைத் தளத்தில் ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் பீ வலயத்திற்குரிய அரலகங்வில பண்ணையில் விளைவற்று வைக்கப்பட்டிருந்தது. | பசுமை விவசாயக் கைத்தொழிலை நோக்காகக் கொண்டு சேதனப் பசளை உற்பத்திக்காக இயந்திரங்ளைக் கொள்வனவு செய்தல் 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட போதும் 2022 இன் முதலாம் காலண்டில் அரைப்பகுதி உரிய இயந்திரங்கள் மகவாலி அதிகார சபைக்கு கிடைத்திருந்தது. 2022 ஆம் ஆண்டில் நடு அரைப்பகுதியில் நாட்டில் எழுந்திருந்த நிதி ரீதியான நெருக்கடியின் இடையே போதியளவான பணம் காணப்படாமை மற்றும் எரிபொருள் இன்மையின் அடிப்படையில் பண்ணைகளில் கூட்டுப்பசளை உற்பத்திக்கு இந்த இயந்திரங்களை ஈடுபடுத்திக் கொள்ளல் வசதியீனமாக இருந்தது. ஜீ வலயத்தில் கூட்டுப் பசளை உற்பத்தி தளத்திற்கு இந்த இயந்திரங்கை வழங்குவதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் அந்த செயற்பாடுகளும் தற்காலிகமாக கைவிடப்பட்டமையால் எதிர்காலத்தில் வேறு இடங்களுக்கு இயந்திர பொறி முறைகளை ஸ்தாபித்து கூட்டுப் பசளை உற்பத்தி செய்வதற்கு திட்டமிடப் பட்டுள்ளது. | சரியான திட்டத்துடன் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் சிக்கனமற்ற செலவினங்களை தவிர்த்தல் வேண்டும். செயற்திட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| | (ii) | ரூபா 11,270,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட பாரியளவான மற்றும் சிறிய அளவிலான பல்நோக்கு கூரிடும் இயந்திரங்கள் 23 இனை கூட்டுப்பசளை உற்பத்தி நடவடிக்கைகளுக்கு | பாரியளவான மற்றும் சிறிய அளவிலான பல்நோக்கு கூரிடல் இயந்திரங்கள் 23 உம் 2021 ஆம் ஆண்டில் சேதனப் பசளை மேம்படுத்தல் நிகழ்ச்சி திட்டத்திற்காக கொள்வனவு | சரியான திட்டத்துடன் செயற்திட்டத்தை அமுல்படுத்த வேண்டி இருந்ததுடன் செயற்திட்ட |

| | | | |
|---|---|---|---|
| | ஈடுபடுத்தப்படாமல் மாடுகளுக்காக வழங்கப்படுகின்ற புற்களை வெட்டுவதற்கு பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 1,173,000 பெறுமதியான பல்நோக்கு கூறிடல் இயந்திரங்கள் 02 மாத்திரம் வலயங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. | செய்யப்பட்ட போதிலும் மீண்டும் இரசாயனப் பசளை பயன்படுத்தப்பட்டமையால் சேதனப் பசளை உற்பத்தி மந்த கதியானதன் காணமாக இந்த இயந்திரங்கள் பாற் பசுக்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக மாதிரியாக ஈடுபடுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்ததன் மூலம் நாட்டில் உணவுப் பாதுகாப்புக்கு தீர்வாக இருந்தது. | நோக்கங்களை அடைந்து கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மகவாலி பீ மற்றும் எல் வலயங்களில் பரவியுள்ள அதிகளவான சிறுநீரக நோயாளர்களுக்கு தீர்வாக தரத்தினையுடைய நீர் வழங்களை உறுதிப்படுத்தும் நோக்கில் மீள் சுத்திகரிப்பு நீர் இயந்திரங்களை 30 இனை வழங்குதல், நிர்மாணித்தல், பொருத்துதல் மற்றும் அதனுடன் தொடர்பான வசதிகளை வழங்குதல் மற்றும் 10 வருட காலத்தில் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக 2015 ஆம் ஆண்டின் போது அதிகார சபை தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்துடன் உடன்படிக்கை செய்திருந்தது. அதன் பிரகாரம் அதிக சபையால் ரூபா 80,000,000 செலவில் ஸ்தாபிக்கப்பட்ட 30 இயந்திரங்கள் பீ வலயத்தில் 09 இயந்திரங்கள் மற்றும் எல் வலயத்தில் 04 இயந்திரங்களுமாக 13 இயந்திரங்கள் 2023 மே 01 ஆந் திகதி வரையில் செயலிழந்த நிலையில் காணப்பட்டது. பீ வலயத்தில் இயந்திரங்களை ஸ்தாபிக்கும் போது களப் பரிசேதனை மற்றும் மதிப்பீடுகள் மேற்கொண்டு இடங்களை தெரிவு செய்யாமையின் காரணமாக 05 சுத்திகரிப்பு இயந்திரங்கள் பயனற்றுக் காணப்பட்டதுடன் 04 இயந்திரங்கள் பொருத்தப்பட்டதன் பின்னர் செயற்படுத்தப்பட்டிருக்க வில்லை. எல் வலயத்தில் செயலிழந்து காணப்பட்ட 02 இயந்திரங்கள் செயலிழந்த நிலையில் காணப்பட்ட போதும் 2023 மே 10 ஆம் திகதி உடன்படிக்கை செய்த கமநல | பீ வலயத்தில் 09 இயந்திரங்கள் மற்றும் எல் வலயத்தில் 04 இயந்திரங்கள் ஆக 13 இயந்திரங்கள் செயலிழந்த நிலையில் காணப்பட்டது. 06 இயந்திரங்கள் தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களத்தின் மூலம் பழுதுபார்ப்பதற்கு தேவையான கேள்வி நடைமுறைகள் தற்போது மேற்கொள்ளப்படுவதாக 2023 ஒக்டோபர் 06 ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. 03 இயந்திரங்கள் விவசாய அமைப்புக்களின் நிதியத்தில் இருந்து பழுதுபார்ப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 04 இயந்திரங்களை பழுதுபார்ப்பதற்கு சமூக நீர் வழங்கல் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | இவ்வாறான செயற்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு முன் சாத்தியவள ஆய்வினை மேற்கொண்டு சிறந்த இடங்களைத் தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். செயலிழந்த நிலையில் காணப்படுகின்ற இயந்திரங்களை விரைவாக பழுபார்த்து மக்களுக்கு தேவையான சுத்திரிக்கப்பட்ட நீரை வழங்குவதற்கும், பயனற்றுக் காணப்படுகின்ற சுத்திகரிப்பு இயந்திரங்களை அவற்றின் தேவையான இடங்களுக்கு மீண்டும் ஸ்தாபிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

விவசாய அமைப்புக்களுக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களத்துடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் அத்தியவசிய பராமரிப்பு நடவடிக்கைகள், சேவை வழங்கல் மற்றும் மேலதிக உதிரிப்பாகங்களை வழங்குவதற்கு தேவையான முகாமைத்துவ மற்றும் மேற் பார்வைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.7 செயற்திட்டம் அல்லது மூலதன வேலைகளில் தாமதம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மகாவலி பீ வலயத்திற்குரிய கந்தக்காடு பிரதேசத்தில் 3770 ஏக்கர் நிலப் பிரதேசத்தில் விவசாயம் மற்றும் கால்நடை வள அபிவிருத்தி செயற்திட்டம் ஒன்றை ஏற்படுத்துவதற்காக அதிகார சபையால் தெரிவு செய்யப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்திற்குரிய சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கும் ஒப்பந்தம் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்திற்கு ரூபா 6,539,600 தொகையில் 2021 செப்டெம்பர் 28 திகதி கையளிக்கப்பட்டிருந் ததுடன் கணக்காய்வுத் திகதியான 2023 மே 23 வரையிலும் ரூபா 3,211,376 தொகை பல்கலைக்கழகத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. 2022 மார்ச் 29 ஆந் திகதிய இலக்கம் 22/0482/317/011 என்ற அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அபிவிருத்தி செய்வதற்கு முன்மொழியப்பட்ட காணி உரித்து தேசிய கால்நடைவள அபிவிருத்தி சபைக்கு கையளித் ததன் காரணமாக ஒரு பகுதி மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்த சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையின் உரித்து மற்றும் மிகுதிக் கொடுப்பனவுகள் பொறுப்புக்கள் தொடர்பாக குறித்துரைத்த இணக்கப்பாட்டிற்கு வருவதற்கு 2023 மே 31 ஆம் திகதி வரை தவறியிருந்ததன் அடிப்படையில் பல்கலைக்கழகத்திற்குரிய சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் | ஸ்ரீ ஜயவர்த்தன புர பல்கலைக் கழகத்தின் மூலம் கந்தக்காடு விவசாய முதலீட்டு செயற்திட்டத்தின் சுற்றாடல் தாக்க ஆய்வு அறிக்கை தயாரித்தல் (EIA ஆய்வு அறிக்கை) மேற்கொள்ளப்பட்ட போதும் அதில் ஆலோசனை சேவைகளுக்குரிய மிகுதி கொடுப்பனவுகள் தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபை நிராகரித்தமையினால் உடன் படிக்கையின் பிரகாரம் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை அதிகார சபைக்கு பெற்றுக் கொள்ளவதற்காகவும் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய கொடுப்பனவுகள் தொடர்பான ஆலோசனைகள் மற்றும் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவை குறிப்பொன்று தயாரித்து அமைச்சரவை அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் சாத்தியவள ஆய்வினை மேற்கொள்ளல் வேண்டும். ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்களை தாமதமின்றி பூர்த்தி செய்து எதிர்பார்க் கப்பட்ட நலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காரணமாக சரியான சாத்தியவள ஆய்வு மற்றும் திட்டமிடல் இன்றி ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டத்திற்காக கணக்காய்வு திகதி வரையில் செலவிடப்பட்ட ரூபா 3,211,376 தொகை பயனற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தது. | | |
| (ஆ) | அதிகார சபையால் பாற் பசுக்களை பராமரிக்கும் விவசாயிகளுக்கு மகாவலி பீ, சீ, டீ, எல் மற்றும் உடவளவ வலயங்களில் புல் வளர்ப்பதற்காக 2802 ஏக்கர் அளவில் வழங்கப்பட்டு கால்நடைகளின் போசனையை மேம்படுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 2020 திசெம்பர் 31 வரையில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் கணக்காய்வுத் திதியான 2023 மே 31 ஆம் திகதி வரையில் எந்தவொரு காணியும் புல் வளர்ப்பதற்கு பகிர்ந்தளிக்கபட்டிருக்கவில்லை. இதன் போது எல் வலயத்தில் உத்தேசிக்கப்பட்ட புல் வளர்க்கும் காணிக்காக ஆரம்ப சுற்றாடல் பரிசோதனையொன்று மேற்கொள்வதற்காக இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்திற்கு ரூபா 1,551,958 தொகையும், தொல்பொருள் மதிப்பீட்டு ஆய்விற்காக தொல்பொருள் திணைக்களத்திற்கு ரூபா 140,099 தொகையும், புல் வளர்க்கும் நிலத்தை அளவிடும் நடவடிக்கைகளுக்காக இலங்கை நில அளவையாளர் திணைக்களத்திற்கு ரூபா 4,879,825 தொகையும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 6,545,882 அதிகார சபையால் செலவிடப்பட்டிருந்தது. | மகாவலி பீ, சீ மற்றும் உடவளவ புல் வளர்க்கும் நிலமாக விடுவிப்பதற்கு தகைமையான காணிப்பகுதியை இனங்கணல் முடிவடைந்துள்ளது. உடவலவ வலயத்தில் மயுரபுர பிரிவில் புல் வளர்க்கும் காணிக்காக ஒதுக்கப்பட்டுள்ள காணியின் அளவு 735.36 ஹெக்டயர் பகுதி 15 எருமைமாடுகள் இனப்பெருக்க பண்ணைகளுக்காக 75 ஏக்கர் விடுவிப்பதற்கு சுற்றாடல் அங்கீகாரம் மற்றும் அந்த காணிப்பகுதியை விடுவிப்பதற்கு சனாதிபதி அவர்களின் அனுமதியை பெற்றுக் கொள்வதற்கு நீர்ப் பாசன அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டில் நாடு மூடப்பட்டதன் காரணமாக இந்த நடவடிக்கைகளில் சிறிது தாமதம் ஏற்பட்ட போதும் உத்தேசிக்கப்பட்ட நிலத்தில் பாற் பசுக்களை வளர்க்கும் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கு 2022 யூலை 21 ஆம் திகதி காணி கச்சேரி ஒன்று நடாத்தி 47 நபர்களுக்கு விடுவிப்பதற்கு சபையால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. 2022 நவம்பர் மாதம் வரையில் எல் வலயத்தில் புல் வளர்க்கும் நிலத்தில் பாற் பசுக்களை விடுவிப்பதற்கு தேவையான சட்ட ரீதியான நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்ட போதிலும் சனாதிபதி செயலாளரின் 2022 நவம்பர் 11 ஆம் திகதி இலக்கம் PS/ CSA/00/08 என்ற கடிதத்தின் | செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும் ஆரம்பிக்கப்பட்ட செயற்றிட்டங்களை விரையவாக பூர்த்தி செய்து எதிர்பார்க்கப்பட்ட நலன்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பிரகாரம் அதிகார சபைக்குரிய அரசாங்கத்தின் காணியை விடுவித்தல் தற்காலிகமாக கைவிடப்பட்டமையால் செயற்றிட்டத்தின் நடவடிக்கைகளை தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தமையை அறியத்தருகின்றோம். | |
| (இ) | 2021 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்ட மகாவலி வலயத்தைச் சார்ந்த சமுர்த்தி நலனாளிகள் பாற்பசுக்களை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகளில் பண்ணைகளை அபிவிருத்தி செய்யும் செயற்றிட்டத்தில் ஆரம்பமாக அதிகார சபையுடன் தொடர்பினை ஏற்படுத்துதல், சிவில் பாதுகப்பு திணைக்களத்தின் ஊழிய பங்களிப்பு, சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் நிதியேற்பாட்டின் கீழ் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. பின்னர் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் நிதியேற்பாட்டினை வழங்குதல் நிராகரித்ததன் காரணமாக செயற்றிட்டம் செற்படுத்தப்படாதிருந்ததுடன் 150 மாட்டுத் தொழுவங்கள் மற்றும் 150 நீர்த் தடாகங்களை நிர்மாணிப்பதற்காக 2021 நவம்பர் 30 ஆம் திகதி அதிகார சபையின் பணிப்பாளர் (மீன்பிடி மற்றும் கால்நடை வள அபிவிருத்தி) இற்கு விடுவிடுக்கப்பட்ட ரூபா 1,425,000 முற்பணத் தொகை நட்டத்திற்கு உட்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியான 2023 மே 02 ஆம் திகதி வரை உரிய பணிகள் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் முற்பணத் தொகையும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | பாற் பசுக்களை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் பண்ணைகளை அபிவிருத்தி செய்யும் செயற்றிட்டத்தின் கீழ் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு 150 மாட்டு தொழுவங்கள் மற்றும் 150 நீர்த் தடாகங்களை நிர்மாணிப்பதற்கான முற்பணம் விடுவிக்கப்பட்ட போதிலும் நாட்டில் தினந்தோறும் பொருட்களின் விலைகள் உயர்வடைந்து சென்றதன் காரணமாக அந்த விலையில் மாட்டுத் தொழுவங்கள் மற்றும் உணவு பாத்திரங்களை நிர்மாணிப்பதற்கு முடியாதிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் காணப்படுகின்ற வரையறுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் கீழ் 74 மாட்டுத் தொழுவங்களை நிர்மாணிக்குமாறு அவர்களுக்கு அறிவிக்கப் பட்டிருந்தது. முற்பணத் தொகையை தீர்த்துவைக்கப்பதற்காக வழங்கப்பட்ட விபரங்கள் போதியளவில் இல்லாமையினால் விரைவாக தீர்த்துவைத்தல் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு அந்த நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். ஆரம்பிக்கப்பட்ட செயற்றிட்டங்களை விரைவாக பூர்த்தி செய்து எதிர்பார்க்கப்பட்ட நலன்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். முற்பணத்தை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மகாவலி வலயங்களில் விவசாயிகளுக்கு தரமான விதை நெல் உற்பத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பித்து 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் அதிகார சபைக்குச் | 2021 ஆம் ஆண்டின் போது அரச கொள்கையின் அடிப்படையில் வலய ரீதியான விவசாய மக்களுக்காக உறுப்படுத்தப்பட்ட விதை | செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட |

சொந்தமான ரன்ஹிந்த நாற்றுப் பண்ணைக்காக ரூபா 60,073,046 செலவில் 15 இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக ரூபா 3,824,406 செலவில் நெல் உழரவைப்பதற்காக புதிதாக 03 இயந்திரங்கள் 2021 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.
நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பித்து 2021 சிறுபோகம் முதல் விதை நெல் உற்பத்தி செய்து அந்த விதை நெல்லைப் பயன்படுத்தி 04 போகங்களுக்காக 196.25 ஹெக்டெயர், 195.75, 152.75 மற்றும் 100 ஆக நெல் பயிரிடப்பட்டிருந்தது. எனினும் படிப்படியாக நெற் பயிர்ச் செய்கை செய்யப்பட்ட நிலத்தின் அளவு குறைவடைந்திருந்ததுடன் 2023 சிறு போகத்திலிருந்து விதை நெல் உற்பத்தி நிறுத்தப்பட்டு மீண்டும் முன்னர் காணப்பட்ட போக வாடகை முறையின் கீழ் விவசாயிகளுக்கு பண்ணைகளுக்கு உரிய வயற் காணிகளில் பயிர்ச் செய்வதற்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக விதை நெல் உற்பத்திக்காக அதிகார சபை செலவிட்ட ரூபா 63,897,452 தொகையில் சரியான விளைவுகள் பெறப்பட்டிருக்கவில்லை.

நெல் வழங்கும் நோக்கில் ரன்ஹிந்த சந்தையில் பயிர்ச் செய்கை நிலம் 196 ஹெக்டேயர் பயிர்ச் செய்கை நடவடிக்கை களுக்காக 2021 சிறுபோகத்திலிருந்து அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.
கொவிட் தொற்று நோய் நிலைமையின் பின்னர் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் அடிப்படையில் 2021/22 பெரும் போகத்தின் போது இரசாயனப் பசளை மற்றும் விவசாய உள்ளீடுகள் இறக்குமதி வரையறுக்கப்பட்டமையும் 2022 சிறுபோகத்தின் போது நாட்டில் அதிக எரிபொருள் நெருக்கடிக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டதனால் நிலத்தினைப் பண்படுத்தும் நடவடிக்கைகள் உரிய நேரத்தில் மேற்கொள்வதற்கு முடியாதிருந்தமையும் 2022/23 பெரும் போகத்தின் போது திறைசேரி நிதி ஏற்பாட்டினை பெற்றுக்கொள்ளல் கிடைத்தல் வரையறுக்கப் பட்டமை மற்றும் தேவையான சந்தர்ப்பங்களின் போது நிதி மூலங்கள் உரியவாறு கிடைக்கா மையின் அடிப்படையில் மிகவும் வெற்றிகரமான மேற்கொள்ளப்பட்ட விதை நெல் உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஈடுபடுத்தப்பட்ட நிலம் படிப்படியாக குறைவடைந்து சென்றது. 2021 ஆம் ஆண்டின் போது கமநல இராஜாங்க அமைச்சு வழங்கிய நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தி ரன்ஹிந்த விதை நெல் உற்பத்திப் பண்ணையில் விதை நெல் உற்பத்தி நிகழ்ச்சி திட்டத்திற்காக இயந்திரங்களை கொள்வனவு செய்தல், பண்ணைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை நவீனமயப்படுத்துதல் மற்றும் 03 மேடைகளை

ல் வேண்டும். செயற்திட்டத்தை மீண்டும் அமுல்படுத்தும் இயலுமையைக் கவனத்திற்கொண்டு அதன் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | | நிர்மாணித்தல் மற்றும் உற்பத்திக்காக நேரடியான மற்றும் மறைமுகமான பங்களிப்பு வழங்கப்பட்டது. 2021/22 பெரும் போகத்தில் விதை நெல் 403 மெற்றிக்தொன் மற்றும் வணிக நெல் 52 மெற்றிக் தொன் உற்பத்திக்கு இதன் மூலம் முடியுமாக இருந்ததுடன் விற்பனையிலிருந்து கிடைத்த நிதிரீதியான பெறுமதி ரூபா 72 மில்லியன் ஆகும். விதை நெல் உற்பத்தியை சிக்கலான மற்றும் நுண்ணியல் செயற்பாடுகளை உடையதாக இருந்ததுடன் நிலத்தினைப் பண்படுத்துல் முதல் அறுவடை வரை இழப்புகளைக் குறைத்தல் வரையான செயற்பாடுகளின் போது பெறப்பட்ட உபகரணங்கள் மற்றும் வசதிகள் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. தற்போது திறைசேரி நிதி ஏற்பாட்டைப் பெற்றுக்கொள்ளுதலில் பிரச்சினைகளின் அடிப்படையில் பண்ணைகளில் விதை நெல் உற்பத்தி மேற்கொள்ள முடியாதிருந்தமையால் அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் தனியார் முதலீட்டார்களை தொடர்புபடுத்தும் வரை ஏலமிடல் முறைமையின் பிரகாரம் போகங்கள் வாடகைக்கு வழங்கப்படல் வேண்டும். அதன் பிரகாரம் மேற்கூறப்பட்ட நிதி விளைவற்ற செலவினமாக இல்லாதிருந்த முதலீடொன்றாக கருத முடியும். | |
| (உ) | அதிகார சபையால் சிறிய அளவிலான நீர் மின் உற்பத்திக் கூடமொன்றை நிர்மாணிப்பதற்கு முதலீட்டாளர்களைத் தெரிவு செய்தல் மற்றும் அதற்குப் பொருத்தமான 20 இடங்களை இனங்காண்பதற்கு 2011 ஆம் ஆண்டில் இருந்து 2013 ஆம் ஆண்டு வரை ரூபா 1,297,533 செலவிடப்பட்டிருந்த | சிறிய அளவிலான நீர் மின் செயற்திட்ட முதலீட்டாளர்களால் 2021 ஆம் ஆண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கையினைக் கவனத்திற் கொண்டு முன்னாள் இருந்த சனாதிபதி | முகாமைத்துவத்தின் கருத்துரை மற்றும் அவதானிப்புக்கள் இணங்கவில்லை. செயற் திட்டத்தை ஆர்ம்பிப்பதற்கு முன்னர் |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் அதில் 10 செயற்திட்டங்கள் கணக்காய்வுத் திகதி அதாவது 2023 ஏப்ரல் 28 ஆம் திகதி வரையும் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. | செயலாளர் ''நீர் போசனை பிரதேச முகாமைத்துவக் கட்டணம்'' அறவிடுதல் கைவிடலாக இலங்கை மகாவலி அதிகார சபை மற்றும் உரிய ஏனைய நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த தீர்மானம் வழங்கப்பட்ட 2021 நவம்பர் மாதம் முதல் உரிய நீர் நிலை பிரதேச முகாமைத்துவக் கட்டணம் அதிகார சபைக்கு கிடைத்திருக்கவில்லை. எனினும் 2022 யூன் மாதத்தின் போது சனாதிபதி செயலாளரின் ஆலோசனையின் படி 2022 யூன் மாதம் முதல் நீர் நிலை பிரதேச முகாமைத்துவ கட்டணம் கிடைக்க வேண்டியிருந்த போதிலும் அதுவரையில் இலங்கை மின்சார சபை முகங்கொடுத்திருந்த நிதி நெருக்கடியின் காரணமாக மின்சாரத்திற்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் அதிகார சபைக்கும் கிடைக்க வேண்டிய நீர் நிலை பிரதேச முகாமைத்துவ கட்டணம் கிடைத்திருக்கவில்லை. எனினும் உரிய நீர் போசணை பிரதேச முகாமைத்துவ கட்டணம் 2023 யூலை மாதம் முதல் கிடைக்கின்றது. எனினும் 2021 நவம்பர் மாதம் முதல் 2022 யூன் மாதம் வரையான காலப் பகுதிக்காக நீர் நிலை பிரதேச முகாமைத்துவ கட்டணம் அறவிடுவதற்கான இயலுமை காணப்படவில்லை. | சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்படல் வேண்டும். முதலீட்டாளர்கள் மற்றும் பொருத்தமான இடங்களை இனங்காணும் பணிகளை மேற் கொண்டு பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 2022 ஆம் ஆண்டில் நீர்ப்பாசன சௌபாக்கிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 54 குளங்களை மறுசீரமைப்பதற்கு திட்டமிடப்பட்டு வருடாந்த பாதீட்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூபா 80 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. 2022 | நீர்ப்பாசன சௌபாக்கிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அத்தியவசியமாக மேற்கொள்ள வேண்டிய வேலைகளின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட 275 | சாத்தியவள ஆய்வின் மூலம் முன்னுரிமை அடிப்படையில் நிறைவேற்ற வேண்டிய |

| | | | |
|---|---|---|---|
| | திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் நிதி சார் செயல் முன்னேற்றம் ரூபா 81.4 மில்லியனாக இருந்ததடன் 32 குளங்கள் மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிதிசார் செயல் முன்னேற்றம் 102 சதவீதமாக இருக்கும் போது பௌதீக செயல் முன்னேற்றம் 59 சதவீதமாக இருந்தது. | குளங்களில் 152 இன் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. 67 குளங்களில் எந்தவொரு மறுசீரமைப்பு நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்படவில்லை. மிகுதியான 56 குளங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. | பணிகளை இனங்கண்டு செயற்திட்டம் திட்டமிடப்படல் வேண்டும். திட்டத்தின் பிரகாரம் விரைவாக வேலைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | றம்புக்கன்ஓய வலயத்தில் கொள்ளேபெத்த பிரிவில் உத்தியோகபூர்வ வீடுகளை நிர்மாணிப்பதற்கு உரிய ஒப்பந்தம் 2017 நவம்பர் 23 ஆம் திகதி ரூபா 4,861,103 தொகையில் கையளிக்கப்பட்டிருந்தது. 2018 ஏப்ரல் 24 ஆம் திகதி அதன் வேலைகள் பூர்த்தி செய்யப்படவேண்டி இருந்த போதும் கணக்காய்வுத் திகதியான 2023 ஏப்ரல் 28 வரையிலும் ஒப்பதம் பூர்த்தி செய்யப்படாமல் நிர்மாண வேலைகள் இடை நடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்ட ரூபா 1,417,556 தொகை அசைவுறாத முற்பண தொகையை அறவிடுவதற்கும் மற்றும் ஒப்பந்தகாரருக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | றம்புக்கன் ஓய வலயத்தில் லொள்ளேபெத்த பிரிவில் உத்தியோகபூர்வ வீடுகளை நிர்மாணிப்பதற்கு உரிய ஒப்பந்தம் 2017 நவம்பர் 23 ஆம் திகதி ரூபா 4,861,103 தொகையில் ஒப்பந்தக்காரருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. 2018 ஏப்ரல் 18 இல் உள்ளவாறு வேலைகள் பூர்த்தி செய்யப்படவேண்டியிருந்த போதும் ஒப்பந்தகாரர் ஒப்பந்தத்தை கைவிட்டு சென்றமையால் செலுத்தப்பட்டுள்ள அசைவுறாத முற்பணத் தொகையான ரூபா 1,243,051 இனை அறவிடுவதற்காக சட்டமா அதிபரிடம் விசாரித்து வழங்கப்படுகின்ற தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு சட்டப் பிரிவின் மூலம் மிகுதி நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இந்த ஒப்பந்தத்தின் மிகுதி வேலைகள் இலக்கம் DDG/TS/CON/RAMBA/B/14 ஒப்பந்தத்தின் கீழ் நிர்மாணித்து பயன்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம் வேலைகள் பூர்த்தி செய்யாத ஒப்பந்தகாரருக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் மற்றும் ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | தெற்கு அதிவேக வீதியில் மாத்தறையில் இருந்து | இதற்காக ரூபா 43,883,862 தொகையொன்று வீதி | பாதிப்படைந்த நீர்ப்பாசன |

| | | |
|---|---|---|
| அம்பாந்தோட்டை வரையான பகுதியை நிர்மாணித்தலின் காரணமாக அதிகார சபையின் வளவ விசேட அதிகாரப் பிரதேசத்திற்கு உரிய அங்குணு கொல பெலச மற்றும் முரவெசிஹேன பிரிவுகளுக்குரிய பிரிக்கும் வாய்ய்கால்களை சார்ந்த நபர்களுக்கு ஏற்பட்ட இழப்பினை புனரமைப்பதற்காக அதிகார சபையில் 2021 மார்ச் 04 ஆம் திகதி 10 செயற்திட்டங்களுக்காக ரூபா 43,883,862 மதிப்பீடு ஒன்று தயாரித்து வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் உள்ள உரிய நிர்மாண செயற் திட்டத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த மதிப்பீட்டு தொகையான ரூபா 43,883,862 வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் 2021 மார்ச் 10 ஆந் திகதி வளவ வலயத்தில் வைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2023 ஏப்ரல் 28 ஆம் திகதி வரை இந்த வாய்க்கால்களின் புனரமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படா திருந்ததுடன் உரிய தொகை விளைவற்றுக் வைக்கப்பட்டிருந்தது. | அபிவிருத்தி அதிகார சபையின் வளவ வலயத்திற்கு கிடைத்திருந்தது. நீர்ப்பாசன வாய்க்கால்களை உள்ளடக்கிய நபர்களுக்கு ஏற்பட்ட இழப்பினை நல்ல நிலைக்கு கொண்டு வருவதற்கு 10 செயற்திட்டங்களுக்காக தயாரிக்கப் பட்ட மதிப்பீட்டில் 08 செயற்திட்டங்களுக்காக வேலை அங்கீகாரம் கிடைத்து பெறுகை நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். | நபர்களுக்கு பழுதுபார்ப்பதற்காக பெறுகை நடைமுறைகள் ஊடாக ஒப்பந்தகாரர்களைத் தெரிவு செய்து புனரமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படல் வேண்டும். |

**3.8 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடு**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பக்கமுண பேருந்து நிலையத்தை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் பெறுகை நடைமுறைகளுக்கு புறம்பாக மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திற்கு கையளிப்பதற்கு 2021 ஆகஸ்ட் 24 ஆம் திகதிய இலக்கம் අමප/21/1396/317/039 என்ற அமைச்சரவைத் தீரமானத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் போது நிதி அமைச்சரின் பரிந்துரை தொடர்பாக கவனத்தில் கொள்ளுமாறு அமைச்சரவை தீர்மானித்திருந்ததுடன் அரசாங்கத்திற்குச் சொந்தமான நிர்மாணங்கள் நிறுவனத்தில் வரையறுக்கப்பட்ட போட்டி கேள்வி நடைமுறை களின் கீழ் கவனத்தில் கொள்வதற்கு நிதி அமைச்சர் பரிந்துரை செய்ததிருந்தார். எனினும் அது தொடர்பாக கவனத்தில் கொள்ளாமல் மேற்கூறப்பட்ட நிறுவனத்திற்கு நேரடியாக ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் பக்கமுன | பக்கமுன நகரத்தில் பொது மக்கள் பேருந்து நிலையத்தை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திற்கு கையளித்தல் அந்த ஒப்பந்தத்திற்காக 2021 ஆகஸ்ட் 24 ஆம் திகதிய இலக்கம் අමප/21/1396/317/039 என்ற அமைச்சரவைத் தீரமானத்தின் அடிப்படையில் கையளிக்கப் பட்டிருந்தது. மேலும் இந்த ஒப்பந்தம் நிர்மாண மூலப் பொருள்கள் கூறுவிலைகளில் ஏற்பட்ட விரைவாக அதிகரிப்பு மற்றும் நாட்டில் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடியின் இடையே நிதி ஏற்பாடு இல்லாமையினால் இரு தரப்பினரினதும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் 2023 மே 12 ஆம் திகதி இரத்துச் | ஒவ்வொரு தடவையும் பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் போட்டியாளர் பெறுகை திட்டம் பின்பற்றப்படல் வேண்டும். கொடுப்பனவு செய்யப்பட்ட பணத்தை மேவுகை செய்து கொள்வதற்கும் மற்றும் திட்டமிடப்பட்ட பணிகளை பூர்த்தி செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பேருந்து நிலைய நிர்மாணம் 2022 ஏப்ரல் 04 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டி இருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2023 ஏப்ரல் 28 ஆம் திகதி வரையில் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டிருந்தது. வேலை ஆரம்பிப்பு முற்பணமாக 2021 திசெம்பர் 06 மற்றும் 2022 மார்ச் 28 ஆம் திகதிகளில் செலுத்தப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 13 மில்லியன் தொகையும் அதிகார சபைக்கு அறவிடுவதற்கு முடியாதிருந்ததுடன் 2022 ஆகஸ்ட் 31 ஆம் திகதி செலுத்தப்பட்ட ரூபா 6,238,208 ஒறுதிப் படுத்தப்பட்ட வேலைப் பெறுமதியை உள்ளடக்கி ஒட்டுமொத்த கொடுப்பனவுகள் ரூபா 19,238,208 ஆகக் காணப்பட்டது. | செய்யப்பட்டிருந்தது. இந்த இரத்துச் செய்தல் மேற்கொள்ளப்பட்டதன் மூலம் எந்தவொரு பாதிப்பும் நாட்டின் மக்களுக்கோ அல்லது சுற்றாடலுக்கு ஏற்படாதிருந்ததுடன் மிகுதி வேலை நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்ட பின்னர் ஒப்பந்தத்தின் மிகுதி வேலைகளை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட வேலை ஆரம்பிப்பு முற்பணம் தீர்த்துவைக்கப்படும் வரை மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திற்கு செலுத்துவதற்குள்ள ஏனைய பணிகளுக்கான ரூபா 13 மில்லியனை விஞ்சிய கொடுப்பனவுகள் தற்காலிகமாக கைவிடப் பட்டுள்ளது. | |
| (ஆ) | மகாஓயா வலயத்தில் உத்தியோகபூர்வ வீடுகளை நிர்மாணிப்பதற்காக 2017 நவம்பர் 14 ஆம் திகதி ரூபா 4,843,183 தொகையும் ஒப்பந்தம் ஒன்று கையளிக்கப்பட்டிருந்ததுடன் அதன் போது ரூபா 1,422,931 அசைவுறாத முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. உடன்படிக் கையின் பிரகாரம் 2018 மே 06 ஆம் திகதி வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2023 மார்ச் 28 ஆம் திகதி வரையிலும் ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்படாமல் உரிய நிர்மாண வேலைகள் கைவிடப்பட்டிருந்தது.<br>அந்த ஒப்பந்தம் குறித்துரைத்த திகதியில் நிறைவேற்றப்படாதிருக்கும் போது ரன்ஹிந்த சுற்றுலா விடுவிதியினைப் பழுதுபார்ப்பதற்கு உரிய ஒப்பந்தம் 2018 திசெம்பர் 24 ஆம் திகதி ரூபா 12,107,00 தொகையில் மேற்கூறப்பட்ட ஒப்பந்தக்காரருக்கே கையளித்து ஒப்பந்தகாரருக்கு ரூபா 3,447,508 செயற்பாட்டு முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கையின் படி 2019 யூலை 19 ஆம் திகதி வரையில் வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் | ரம்புக்கன் ஓயா வலயத்தில் மகா ஓய முகாம் வளவில் IV தரத்தில் உத்தியோகபூர்வ வீடுகளை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் இலக்கம் MA/TS/RIDE/B/57 இன் கீழ் 2017 நவம்பர் 14 ஆம் திகதி ரூபா 4,843,183 தொகையில் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது.<br>ஒப்பந்தம் 2018 மே 06 ஆம் திகதியில் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்ததாக காணப்பட்டதுடன் அதற்காக ரூபா 1,414,556 தொகை செயற்பாட்டு முற்பணம் செலுத்தப்பட்ட போதும் ஒப்பந்தகாரரால் அது கைவிடப்பட்டிருந்தது. செலுத்தப்பட்டுள்ள அசைவுறாத முற்பணத்தை அறவிடுவதற்காக சட்டமா அதிபரின் அவதானிப்பை அடிப்படையாகக் கொண்டு அதிகார சபையின் சட்ட பிரிவு மிகுதி நடவடிக்கைகளை | உத்தியோகபூர்வ வீடுகள் மற்றும் சுற்றுலா விடுதிகளை நிர்மாணிக்கும் பணிகளைக் கைவிட்ட ஒப்பந்தகாரருக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் அதிகார சபைக்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கும், உத்தியோகத்தர்களின் பொறுப்புக்களுக்கு எதிராக செயற்பட்டிருப்பார்களாயின் ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கும் பூர்த்தி செய்யப்படாத வேலை பகுதிகளைப் பரீட்சித்து |

| | | | |
|---|---|---|---|
| | கணக்காய்வுத் திகதியான 2023 ஆகஸ்ட் 16 வரையிலும் வேலைகள் பூர்த்தி செய்யப்படாமல் அந்த ஒப்பந்தகாரரும் கைவிட்டுச் சென்றிருந்தார். பிரதிப் பணிப்பாளரின் (சட்டம்) 2022 ஒக்டோபர் 03 ஆம் திகதிய இலக்கம் MA/LO/1.4.2 என்ற கடிதத்தின் பிரகாரம் முற்பணத் தொகை ஒப்பந்தகாரருக்கு வழங்கப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது பெறப்பட்ட வங்கி பிணை முறியில் ஒப்பந்தகாரருக்கு மேற்கொள்ளப்படுகின்ற சகல கொடுப் பனவுகளும் நிர்மாணப் பாதுகாப்பு நிதிய கணக்கில் வைப்புச் செய்யுமாறு நிபந்தனையில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு முரணாக அதிகார சபையால் உரிய கொடுப்ப னவுகள் ஒப்பந்தகாரருக்கு செலுத்தி இருந்ததன் காரணமாவும் மற்றும் வங்கி பிணை முறயில் காலம் விஞ்சியிமையினாலும் அதன் மூலப்பினை மீளளிப்புச் செய்து கொள்வதற்கு அதிகார சபைக்கு முடியாதிருந்தது. தற்போது ஒப்பந்தம் ஆரம்பிக்கப்பட்டு 04 வருடங்கள் கடந்திருந்ததுடன் சுற்றுலா விடுதியின் கூரை அகற்றப்பட்டதன் காரணமாக அந்தக் கட்டிடம் மேலும் பாதிப்பிற்கு உட்பட்டிருந்தது. | மேற்கொள்கின்றது. எதிர்காலத்தில் பணம் செலுத்தப்பட்டதன் பின்னர் மிகுதி நிர்மாணங்களை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | அவற்றைப் பூர்த்தி செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | அதிகார சபையினால் தம்மென்னாவ குளத்தை அண்மித்து பொருளாதார நிலையமொன்று ரூபா 6,514,819 தொகையில் நிர்மாணிப்பதற்காக பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்கு புறம்பாக அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்துடன் 2021 ஒக்டோபர் 12 ஆந் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது.<br>உடன்படிக்கையின் பிரகாரம் உரிய நிர்மாணப் பணிகள் 60 நாட்களுக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதும் அந்த சந்தர்ப்பம் வரையிலும் நிர்மாண நிலத்தை விடுவித்துக் கொள்ளப்படாதிருந்ததுடன் உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு முன்னர் 2021 ஆகஸ்ட் 23 ஆந் திகதி ரூபா 2,062,201 தொகை அசைவுறாத முற்பணத் தொகை பணியகத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தது. 2023 ஏப்ரல் 28 ஆம் திகதி உரிய ஒப்பந்தம் கைவிடப்பட்டிருந்ததுடன் கணக்காய்வு திகதியான 2023 ஏப்ரல் 28 ஆம் திகதி | மேற்கூறப்பட்ட ஒப்பந்தம் 2021 யூன் 14 ஆம் திகதி இலக்கம் 21/0967/317/026 என்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் கீழ் CECB நிறுவனத்திற்கு நேர் ஒப்பந்தம் ஒன்றாக பெறுகை வழிகாட்டிக் கோவை 2.14.1 (Supplementary 35) இன் பிரகாரமும், அமைச்சரவை பெறுகை குழுவின் அங்கீகாரத்துடன் கையளிக்கப்பட்டிருந்தது.<br>உரிய நிர்மாணங்களை மேற்கொள்வதற்குரிய காணி வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பாதுகாப்பு எல்லைக்குரியதாக இருந்தமையால் அந்த அதிகார சபை நிர்மாணிப்பதற்கு அனுமதி வழங்காமையினால் மேற்கூறப்பட்ட ஒப்பந்தம் 2023 ஏப்ரல் 28 ஆம் திகதி | இவ்வாறான செயற் திட்டங்களை ஆராம்பிப்பதற்கு முன்னர் ஆரம்பமாக நிறைவேற்ற வேண்டிய விடுவித்தல்களை மேற்கொள்ளல், நிலம் மற்றும் ஏனைய தேவையான வளங்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் அனுமதியினை வழங்கும் இயலுமை தொடர்பாக உறுதிப்படுத்தி கொள்ளல் மற்றும் திட்டமிடலுக்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வரையில் அசைவுறாத முற்பணம் விநியோகிக்கப்பட்டு 02 வருடங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும் அதனை மீள அறவிடுவதற்கோ அல்லது அந்த ஒப்பந்தம் தொடர்பாக மிகுதி நடவடிக்கைகள் எடுப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பரஸ்பர இணக்கப்பாட்டின் அடிப்படையில் கலைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேலும் இந்த நிர்மாணத்திற்காக உரிய ஒப்பந்தக் கம்பனிக்கு வழங்கப்பட்ட அசைவுறாத முற்பணத் தொகையான ரூபா 2,062,201 தொகை அந்த கம்பனிக்கு அதிகார சபையால் செலுத்த வேண்டிய இயற்கை உணவகம் நிர்மாணிக்கும் பட்டியலில் குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்ற என அறியத்தருகின்றோம். | வழங்கப்பட்ட செயற்பாட்டு முற்பணத் தொகை உடனடியாக அறவிட வேண்டியிருந்ததுடன் உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கு முன்னர் முற்பணம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மத்திய மாகாண அலுவலகமாக பயன்படுத்தப் படுகின்ற பொல்கொல்ல வெல்ல அருகில் அமைந்துள்ள கட்டடம் மகாவலி அதிகார சபைக்கு கையேற்கப்பட்டு மத்திய சுற்றாடல் அதிகார சபைக்குரிய குண்டசாலை வராப்பிட்டிய பிரதேசத்தில் காணி ஒன்றில் புதிய கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக மகாவலி அதிகார சபையினால் ரூபா 32,096,839 ஆன ஒப்பந்தம் ஒன்று மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திற்கு உடன்படிக்கைகளில் கைச்சாத்திடாமல் கையளிக்கப்பட்டிருந்தது. எனினும் நிதி ஏற்பாடு போதியளவில் இல்லாமையின் அடிப்படையில் கணக்காய்வுத் திகதியான 2023 ஏப்ரல் 28 வரையிலும் இணங்கப்பட்ட பிரகாரம் 04 மாடிகளையுடைய கட்டடம் நிர்மாணிக்கப்படாதிருந்ததுடன் தரை மாடி மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அதுவும் உரிய பூர்த்தி செய்தல் இன்றி முழுமைப் படுத்தப்படாமல் முடிவுறுத்தப்பட்டதன் காரணமாக மத்திய சுற்றாடல் அதிகார சபைக்குரிய சட்டம் கணக்காய்வுத் திகதி வரையிலும் கையேற்கப்பட்டிருக்கவில்லை. | மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மத்திய மாகாண அலுவலகம் நடாத்திச் செல்வதற்காக குண்டசாலை பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள பழைய கட்டிடத்துடனான வராப்பிட்டிய காணியைக் கையேற்றல் மற்றும் புதிய கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் துறை அமைச்சர் சமர்ப்பித்த 2016 ஆகஸ்ட் 30 ஆம் திகதிய இலக்கம் 16/1857/704/052 என்ற அமைச்சரவை குறிப்பில் வழங்கப்பட்ட தீர்மானத்தின் படி உத்தேசிக்கப்பட்ட புதிய கட்டடத்தின் முதலாவது கட்டடத்தை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திற்கு திட்டமிட்டு நிர்மாணித்தல் கையளித்தல் (Trunkey) அடிப்படையில் கையளிப்பதற்கு அங்கீகாரம் கிடைத்திருந்தது. இதற்காக ரூபா 32,096,839 மதிப்பீடு முதலாவது கட்டமாக தரைமாடியில் சிலப் மட்டம் வரை (Slab Level) நிர்மாணிப்பதற்காக மாத்திரம் சமர்ப்பிக்கப் பட்டிருந்தது. | ஒப்பந்தம் கையளிப்பதற்கு முன்னர் சரியான திட்டமிடல் மற்றும் வேலை மேற்பார்வைகள் மேற் கொள்ளப்படல் வேண்டும். சகல தடவைகளிலும் பெறுகை வழிகாட்டிக் கோவையைப் பின்பற்றி ஒப்பந்தகாரர் தெரிவு செய்யப்படல் வேண்டும். உரிய கட்டிடத்தின் நிர்மாணங்களைப் பூர்த்தி செய்து சுற்றாடல் அதிகார சபைக்கு கையளிக்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | எதிர்காலத்தில் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு நிதி ஏற்பாடு கிடைத்த பின்னர் நிர்மாணங்களை விரைவாக பூர்த்தி செய்து அந்த அலுவலக நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுவதாக அதிகார சபை அறிவித்துள்ளது. | |
| (உ) | பணிப்பாளர் நாயகத்தின் 2022 யூன் 29 ஆம் திகதிய இலக்கம் MASL/DG/පොදු/01 என்ற கடிதத்தின் பிரகாரம் மகாவலி வலயங்களில் மற்றும் செயற்பதிட்டங்களில் அத்தியவசிய மற்றும் கால ரீதியான தேவைகள் அதாவது நீர்த்தேக்க முறைமைகளின் பராமரிப்பு பண்ணைகளின் ஊழியர் தேவை சுகாதார நடவடிக்கைகள் மற்றம் முகாம்களை பேணிச்செல்லும் பணிகளை நிறைவேற்றுவதற்காக விவசாய அமைப்பு மட்டத்தில் ஊழியர்கள் சேர்க்கப்படல் வேண்டும். மேலும் பணிப்பாளர் நாயகத்தின் 2019 பெப்ரவரி 01 ஆம் திகதிய இலக்கம் DG/3/2019 என்ற சுற்றறிக்கையின் பிரகாரம் பெறுமதி ரூபா 5,000,000 வரையான சிறிய மறுசீரமைப்புகளுக்குரிய வேலைகள் தகைமையுடன் உள்ள மகாவலி விவசாய அமைப்புக்களுக்கு நேரடியாக கையளிக்க முடியுமாக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் சீ வலயத்தால் மேற்கொள்ளப்பட்ட பராமரிப்பு பணிகளுக்குரிய பெறுமதி கூட்டுமொத்தம் ரூபா 46,045,718 ஆன சிறிய அளவிலான ஒப்பந்தம் (ஊழிய ஒப்பந்தம்) 59 மற்றும் ரூபா 9,281,309 கூட்டுத்தொகையான 05 ஒப்பந்தங்கள் தனியார் ஒப்பந்தகாரருக்கு கையளிக்கப் பட்டிருந்தது. | ஆண்டின் ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் மதிப்பீடு செய்து ஆண்டின் ஆரம்பத்தின் பணிகளுக்காக வழங்கக்கூடிய ஆகக்குறைந்த ஊழிய திகதியில் ஊழிய நாட்களின் விலைகள் கோரி அதன் பிரகாரம் ஒப்பந்தம் வழங்கப்படுகின்றது. விவசாய அமைப்புக்களின் மூலம் இந்தப் பணிகளை மேற்கொள்ளும் பொது உரிய அதிகார பிரதேசத்திற்குரிய நிதிசார் தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ இயலுமை பூர்த்தி செய்த விவசாய அமைப்புக்கள் குறைவாக இருந்தமை, தொழில் அலுவலகத்தில் சட்ட விதிகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட விவசாய அமைப்புக் களைக் கண்டறிவதில் வசதியீனம் இருந்தமை ஊழியர் தேவைகளுக்கு ஈடுசெய்கின்ற விஷேட தரத்திலுள்ள ஊழியர்கள் காணப்படாமை, நீர் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் போது நபர்களை பக்கச்சார்புடன் நடவடிக்கை எடுத்தமையினால் நீர் முகாமைத்துவத்திற்கு பாதிப்பு ஏற்பட்டமை, விவசாய அமைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு பெறப்பட்ட ஊழியர்கள் பின்னைய காலத்தில் ஊழியர் உரிமைகளை கோரியமை, வருடாந்த விவசாய அமைப்புக்களில் உத்தியோகத்தர்கள் | பணிப்பாளர் நாயகத்தின் 2022 யூன் 29 ஆம் திகதிய இலக்கம் MASL/DG/පොදු/01 என்ற கடிதத்தின் பிரகாரம் விவசாய அமைப்புக்களின் மட்டத்தில் ஊழியர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மாற்றமடைந்ததன் அடிப்படையில் பொறுப்புக்களை கைவிட்டுச் சென்ற போன்ற பாதகமான நிலை ஏற்பட்டிருந்தது. விவசாய அமைப்புக்களின் மூலம் தொழிலாளர்களைப் பெற்றுக்கொள்ளும் போது பயிற்சி பெறாத தொழிலாளர்களுக்கு ஆகக் குறைந்தது ரூபா 2,000 தொகையும், சுகாதாரத் தொழிலாளர்களுக்காக ரூபா 3,000 தொகையும், 5 சதவீத மேலதிக தொகையும் விவசாய அமைப்புக்களுக்கு செலுத்துதல் வேண்டும். எனினும் திறந்த கூறுவிலை கோரலின் கீழ் வருடம் முழுவதும் ஊழியர் அலகொன்றிற்கு செலவாகின்ற ரூபா 1,466 மாத்திரம் ஆகும். அதனால் மேற்கூறப்பட்ட விடயங்களை கவனத்திற் கொண்டு ஒப்பந்த அடிப்படையில் இந்தப் பணிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளது. | |

### 3.9 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் அதிகார சபையின் சிரேஷ்ட முகாமைத்துவ நிலையில் 34 பதவிகள் காணப்பட்டதுடன் அதில் 15 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன. அதில் 12 பதவிகளுக்காக பதிற்கடமை, கடமை நிறைவேற்றுதல் / கடமை மேவுகை மற்றும் ஒப்பந்த அடிப்படையில் கடமைகள் நிறைவேற்றப்படுகின்றது. அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்படாத 10 பதவிகளுக்காக நிரந்தர அடிப்படையில் 13 பேரும் ஒப்பந்த அடிப்படையில் 32 பேரும் ஆக 45 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். ஆரம்ப தரத்தில் 04 பதவிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை விஞ்சி 63 பேர்கள் நிரந்தரமாக சேர்க்கப்பட்டிருந்தனர். | 2023 செப்டம்பர் 01 ஆம் திகதி கௌரவ விடயப் பொறுப்பு அமைச்சரின் தலைமையில் அமைச்சு செயலாளர் நடாத்தி விஷேட கலந்துரையாடலின் போது அதிகார சபையின் தற்போதைய பணிப்பொறுப்புக்களுக்கு ஏற்ப மீள் கட்டமைக்கப்பட்ட வேலைத்திட்டமொன்று அமுல்படுத்த வேண்டியிருந்தமையும் அதற்காக அச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டதன் பின்னர் அதிகார சபையின் மிகுதி வேலைத் திட்டங்களைத் தயாரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பதவி வெற்றிடங்களை நிரப்புதல் | மீள் கட்டமைக்கப்பட்ட வேலைத்திட்டம் ஒன்றை விரைவாக அமுல்படுத்தி அதன் பிரகாரம் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்படாத பதவிகளுக்காக உத்தியோகத்தர்களை சேர்க்காதிருத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது என அறியத் தருகின்றோம். | |

### 3.10 வாகன முறைமை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை மகாவலி அதிகார சபைக்குரிய வளவ வதிவிட வியாபார முகாமைத்துவ அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த இலக்கம் WP-JF 3105 என்ற வாகனம் 2004-2005 காலப் பகுதியில் அங்கீகாரமின்றி வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்தமை கடந்த ஆண்டுகளில் கணக்காய்வு அறிக்கையின் மூலம் காண்பிக்கப்பட்ட போதிலும் 2023 யூன் 23 ஆம் திகதி வரையும் அது தொடர்பாக எந்தவொரு நடவடிகையும் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | வளவ வலயத்திற்கு வழங்கப்பட்ட இலக்கம் WP JF - 3105 என்ற கெப் வண்டி தொலைந்தமை தொடர்பாக ஆரம்ப விசாரணை நடாத்துவதற்காக 2023 மே 02 ஆம் திகதி நியமிக்கப்பட்ட குழுவின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைக்காக மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | இது தொடர்பாக விரைவாக நடவடிக்கை எடுத்து வாகனத்தை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கும் வாகனத்தை வழங்கிய உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) நீர்பாசனத் திணைக்களத்திற்குரிய 15 வாகனங்கள் அந்த திணைக்களத்திற்கு முறையாகக் கையளிப்பதற்கு அல்லது அதிகார சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் அதிகார சபையின் தமுத்தேகம இயந்திர வேலைத் தள வளவில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. | நீர்ப்பாசன அமைச்சிற்குரிய வாகனங்கள் இலங்கை மகாவலி அதிகார சபைக்கு கையளிக்குமாறு அல்லது அந்த வாகனங்களை நீர்பாசனத் திணைக்களத்திற்கு எடுத்துச் செல்லுமாறு அறிவிக்கப்பட்ட போதும் அதற்காக பதிலளிக்கப்படவில்லை. | இந்த வாகனங்கள் நீர்பாசனத் திணைக்களத்திற்கு கையளிப்பதற்கோ அல்லது அதிகார சபைக்கு கையேற்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) (i) 2019 ஆம் ஆண்டின் போது வாகனங்களை கைதவிர்ப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரையின் பிரகாரம் 45 வாகனங்களை கைதவிர்ப்பதற்கும் 63 வாகனங்கள் உடைந்த இரும்புகளுக்காக கைதவிர்ப்பதற்கும் 31 வாகனங்களை மீண்டும் பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. உடைந்த இரும்பாக அகற்றபட்ட 63 வாகனங்களில் செசி இலக்கம் அகற்றப்பட்டு அந்த செசி | விரைவாக மகாவலி அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட கால எல்லையில் இறக்குமதி செய்யப்பட்ட மேற்கூறப்பட்ட வாகனங்கள் அந்த சந்தர்ப்பத்தின் போது அமுல்படுத்தப்பட்ட செயற்திட்ட அலுவலகங்களின் பேரிலும் மேலும் சில வாகனங்கள் உதவி வழங்குகின்ற நிறுவனத்தின் பேரிலும் பதிவு செய்யப்பட்டிருந்தது. உரிய வாகனங்கள் செயற்திட்ட | வாகனங்களை விற்றுத் தீர்ப்பதற்கு முன் அவற்றின் உரித்தை அதிகார சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இலக்கம் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் அலுவலகத்திற்கு கையளிக்கப்பட்ட போதிலும் அந்த வாகனங்களில் 25 இன் உரிமைத் தன்மை அதிகார சபையிடம் காணப்படவில்லை. | இறுதியல் அதன் ஆரம்ப நிறுவனமான அதிகார சபைக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்த போதும் அதன் பதிவு உரித்து முறையான பிரகாரம் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. 30 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய இந்த உடைந்த வாகனங்களின் உரித்து குறிப்பிட்ட நிறுவனத்திற்கு தற்போது நாட்டில் செயல் நிலையில் காணப்படவில்லை. | |
| | (ii) | கணக்காய்வுத் திகதி அதாவது 2023 ஏப்ரல் 28 ஆம் திகதி வரையில் உடைந்த இரும்பாக பதிவினை இரத்துச் செய்வதற்கு இனங்காணப்பட்ட இலக்கம் 31-9908 மற்றும் 32-2129 என்ற வாகனங்கள் தனியார் தரப்பினரால் பயன்படுத்தப்படுவதாக மோட்டார் வாகனங்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் தரவு முறையைப் பரீட்சித்த போது அவதானிக்கப்பட்டது. உடைந்த இரும்பாக அகற்றுவதற்கு செசி இலக்கம் அகற்றப்பட்ட 44 வாகனங்களின் பதிவு கணக்காய்வுத் திகதி வரையிலும் இரத்துச் செய்யப்பட்டிருக்கவில்லை. | இலக்கம் 31-9908 மற்றும் 32-2129 என்ற வாகனங்களின் உரித்து முறையே ஹயாமாத்தோடா மற்றும் ஹில் இன்டர்நெசனல் என்ற வெளிநாட்டு உதவி வழங்குகின்ற நிறுவனத்திற்கு உரியதாகும். அதன் செசி இலக்கத்தை வெட்டி அகற்றி மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற கைதவிர்த்தல் (Disposal) செயற்பாடுகளின் கீழ் உடைந்த பொருட்களாக (இரும்புக் குழாய்) உரிய வாகனங்கள் வாடிக்கையாளர்களினால் தற்போதும் வலயங்க ளிலிருந்து எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. | பதிவினை இரத்துச் செய்த வாகனங்களை மீண்டும் பயன்படுத்துதல் தொடர்பாக முறையான பரிசோதனை ஒன்றை நடாத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பதிவினை இரத்துச் செய்யாத வாகனங்களின் பதிவினை இரத்துச் செய்து கைதவிர்ப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிரயம் ரூபா 7,898,381 ஆக காண்பிக்கப்பட்ட திகன வதிவிட வியாபார முகாமையாளர் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த இலக்கம் PG-0455 என்ற வாகனம் 2021 மே 07 ஆந் திகதி விபத்திற்கு உட்பட்டிருந்தது. விபத்து ஏற்பட்டு 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்த பின்னரும் வாகனத்தின் நட்டத்தை மதிப்பீடு செய்து பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளாமை மற்றும் உரிய வாகனத்தின் 2022/2023 | வதிவிட வியாபார முகாமையாளர் (ஈ) வலயத்திற்குரிய இலக்கம் WP/PD-0455 என்ற கப் வண்டி 2021 மே 07 ஆந் திகதி விபத்திற்கு உட்பட்டமை தொடர்பாக ஆரம்ப விசாரணைகள் நடாத்தி அந்த பரிந்துரையை அடிப்படையாகக் கொண்டு கப் வண்டியின் பழுது பார்த்தல்கள் மற்றும் மதிப்பீடு செய்யப்பட்ட தொகையில் காப்புறுதி பூட்கையில் | நட்டம் மற்றும் இழப்பு தொடர்பாக நிதி பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து உரிய பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் இருந்து நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். வாகனத்தை |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டிற்குரிய காப்புறுதி காலத்தில் மேற்கொள்ளாமை ஆக காப்புறுதி நிறுவனத்தில் இருந்து பெறக் கூடியதாக இருந்த காப்புறுதி இழப்பீட்டை பெற்றுக்கொள்வதற்கும் முடியாதுதிருந்தமை தொடர்பாக அதற்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>மேலும் 2023 பெப்ரவரி 14 ஆந் திகதி ரொயட்டா லங்கா நிறுவனம் மூலம் 05 நாட்களுக்காக மாத்திரம் செல்லுபடியான வகையில் வழங்கப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் பழுது பார்த்தலுக்காக செலவான தொகை ரூபா 3,419,252 ஆகும். எனினும் கணக்காய்வு திகதியான 2023 ஏப்ரல் 28 வரையிலும் உரிய பழுது பார்த்தல்களை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நேவுகை செய்யப்படாத தொகை கப் வண்டியின் சாரதியாக கடமையில் ஈடுபட்ட ஊழியரிடம் இருந்து அறவிடுவதற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. வாகனத்தை பழுதுபார்ப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட தொகை ரூபா 3,419,152.42 ஆக இருந்ததுடன் அரச நிதிச்சுற்றறிக்கை 01/2020 இன் படி செயலாளர், நீர்ப்பாசன அமைச்சிற்கு இலக்கம் MASL/ADM/DP/2337 ஆம் இலக்க 2023 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய கடிதம் மூலம் இது தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது. | உரிய காலத்தில் பழுது பார்த்தல் மேற்கொள்ளாமை யின் காரணமாக செலவுகள் கிரயம் மற்றும் காப்புறுதியின்மைய ினால் செலவிடப்பட்ட நட்டத்தை அதற்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிற் கு எதிராக பரிசோதனை நடாத்தி அந்த உத்தியோகத்தரிட ம் இருந்து அறவிட்டு கடமைகளை உரிய பிரகாரம் நிறைவேற்றாமை தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | மகாவலி கேந்திர நிலையத்தில் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டிருந்த இலக்கம் CAF-1918 என்ற வண்டி 2020 பெப்ரவரி 24 ஆந் திகதி விபதிற்கு உட்பட்டிருந்த போதிலும் நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் 03 மாதங்களுக்குள் தொடர்பான பூரண அறிக்கை கணக்காய்வு திகதியான 2023 ஆகஸ்ட் 08 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.<br>விபத்திற்குரிய பழுதுபாத்தல்களுக்காக அதிகார சபையால் ரூபா 932,373 செலவிடப்பட்ட போதும் காப்புறுதி இழப்பீடாக ரூபா 318,350 மாத்திரமே கிடைத்தமையால் ரூபா 614,023 ஆன மிகுதி நட்டத்தை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலக்கம் CF-1918 என்ற வாகனம் விபத்திற்கு உட்டபட்டமை தொடர்பாக ஆரம்ப விசாரனைகள் மேற்கொள்வதற்குரிய வெளிப்படுத்தல்களை பெற்றுக்கொளவதற்காக வருகை தருமாறு இரண்டு சந்தர்பங்களின் போது தனித்தனியாக முன்னால் மகாவலி கேந்திர நிலையத்தின் பணிப்பாளராக கடமையாற்றிய உத்தியோகத்தருக்கும் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றிய சாரதிக்கும் அறிவிக்கப்பட்ட போதிலும் அதற்காக வருகை தந்திருக்கவில்லை. வாகனத் விபத்திற்கு உட்பட்டு இலங்கை மகாவலி சபையில் ஏற்பட்ட நிதி ரீதியான நட்டத்தை காப்புறுதி பூட்கையில் இருந்து ரூபா 1,652 இனை செலுத்துமாறு | நட்டம் மற்றும் இழப்பு தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் தாமதம் இன்றி பரிசோதனைகளை மேற்கொண்டு உரிய பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் இருந்து நட்டத்தை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | | அதன் சாரதிக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும்இது வரையிலும் செலுத்தப்படவில்லையென அறியத்தருகின்றோம். | |
| (ஊ) | தெஹிவத்த கண்டி வதிவிட வியாபார முகாமையாளர் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டு மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் ஆலோசகருக்கு வழங்கப்பட்டிருந்த வாகனம் ஒன்று 2019 திசெம்பர் 22 ஆந் திகதி விபதிற்கு உட்பட்டிருந்ததுடன் நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் 03 மாதங்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டிய இழப்பு தொடர்பான பூரண அறிக்கை 2023 மே 22 ஆந் திகதி அதாவது விபத்து ஏற்பட்டு 03 வருடங்களும் 05 மாதங்களுக்கும் பின்னரே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. வாகனம் ரூபா 9,991,909 மதிப்பீடொன்றின் அடிப்படையில் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக 2023 மார்ச் 23 ஆந் திகதி முகவர் நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் காப்புறுதி இழப்பீடாக ரூபா 3,700,000 மாத்திரமே அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அறவிட முடியாத ரூபா 6,217,909 நட்டத்தை பொறுப்பு வாய்நத தரப்பினரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலக்கம் WP PH - 0845 கெப் வண்டி விபத்திற்கு உட்பட்டமை இலங்கை மகாவலி அதிகார சபைக்கு ஏற்பட்ட நிதி ரீதியான நட்டத்தில் காப்புறுதியில் இருந்து மேவுகை செய்ய முடியாத தொகையான ரூபா 6,217,909.16 தொகையை செலுத்துமாறு உரிய உத்தியோகத்தருக்கு 2003 மே 29 மற்றும் 2023 யூன் 16 ஆந் திகதிகளில் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. செலுத்துதல் தொடர்பாக இது வரை பதில் ஒன்று வழங்கப்பட்டிருக்கவில்லை. அதனால் 2023 ஆகஸ் 07 ஆந் திகதிய கடிதம் மூலம் இது தொடர்பான தேவையான சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு சட்டப்பிரிவின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | நட்டம் மற்றும் இழப்பு தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் தாமதம் இன்றி பரிசோதனைகளை மேற்கொண்டு உரிய பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் இருந்து நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |